T.7228

# வீரதுரங்க ராஜன் கதை

பதிப்பாளர்
**இரா. சித்ரா**

நெறியாளர்
**வீ. அரசு**
பேராசிரியர்

**தமிழ் இலக்கியத்துறை**
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005.
2011

T.7228

# வீரதுரங்க ராஜன் கதை

"சுவடியியலும் பதிப்பியலும்"
பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு


பதிப்பாளர்
**இரா. சித்ரா**

நெறியாளர்
**வீ. அரசு**
பேராசிரியர்



**தமிழ் இலக்கியத்துறை**
சென்னைப் பல்கலைக்கழகம்
பரிதிமாற் கலைஞர் வளாகம்
சென்னை - 600 005

செப்டம்பர் 2011

**“சுவடியியலும் பதிப்பியலும்”**

2010 - 2011 ஆம் ஆண்டிற்கான

பட்டயப்பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிவு எண் : 43011051

வீ. அரசு
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

## நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக்கழக, சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப்பேற்றிற்காக 2010 - 2011 ஆம் கல்வியாண்டில் **வீரதுரங்க ராஜன் கதை** எனும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இப்பதிப்பேடு என்னுடைய மேற்பார்வையின்கீழ் முதுகலை மாணவர் **இரா. சித்ரா** அவர்களால் அவரின் சொந்த முயற்சியில் உருவாக்கப்பட்டது என்று சான்றளிக்கின்றேன்.

நாள் :

இடம் : சென்னை -5

**(வீ. அரசு)**
நெறியாளர்

இரா. சித்ரா
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

## பதிப்பாளர் உறுதிமொழி

சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைக்கு அளிக்கப்பெறும் **வீரதுரங்க ராஜன் கதை** என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு, எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இது இதற்கு முன்பு வேறு எந்தப் பட்டயத்திற்கும் அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதி அளிக்கிறேன்.

நாள் : (இரா. சித்ரா)
இடம் : சென்னை -5 பதிப்பாளர்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 11 |
| நன்றியுரை | 15 |
| கதை தொடக்கம் (விருத்தம்) | 17 |

## பதிப்புரை

சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலிருந்து சுவடி (எண். R. 4254) **வீரதுரங்க ராஜன் கதை** என்பது நான் பதிப்பிக்க எடுத்துக்கொண்ட நூல்.

இக்கதையை எழுதிய ஆசிரியரின் பெயர் குறிப்பிடப் -படவில்லை. இந்நூல் உரைநடையாகவும் சில பாடல்களாகவும் எழுதப்பட்டுள்ளது. அமைச்சரின் சூழ்ச்சியால் நாடு இழக்கும் மன்னனைப் பற்றிய கதை இது. விருத்த பாடல்களால் எழுதப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக ஒரே நிகழ்வே மீண்டும் மீண்டும் இக்கதையில் கூறப்பட்டுள்ளது. சுவடி எழுத்து முறைகளை மாற்றி இப்பதிப்பில் தரப்பட்டுள்ளது.

### கதைச்சுருக்கம்

விசைய நகரம் என்னும் ஊரில் கதைத் தொடங்குகிறது. அந்நகரின் அரசனான வீரதுரங்கராஜன் தன் மந்திரியான தத்துவப்பிரகாசன் என்பவனின் சூழ்ச்சியால் இறந்து விடுகிறான். பிறகு அம்மந்திரி நாட்டை ஆள்கிறான். அந்நாட்டின் ராணி கணவன் இறந்த செய்தியை அறிந்து அம்மந்திரியால் தனக்கும் துன்பம் வரும் என்று எண்ணி ஊரைவிட்டு வெளியே சென்றுவிடுகிறாள். பின்பு பறச்சேரி என்னுமிடத்தில் தங்கி குழந்தை பெறுகிறாள்.

அக்குழந்தை வளர்ந்து தன் தந்தை இழந்த நாட்டை மீட்கிறான். அந்த ராசகுமாரனின் பெயர் வீரமாரன். இக்கதையில் கூறும் நீதியை பழமொழியாகக் கதையின் ஊடே எழுதியுள்ளனர். அவை,

"யாதாமொரு ராசாக்கள் மந்திரி பேச்சைக் கேட்டு நடந்தால் அவர்கள் நாளதுவளாயிலேயும் கெட்டுப் போவார்கள்".

**இக்கதையில் வந்துள்ள வடமொழிச் சொற்களும் இணையான தமிழ்ச் சொற்களும்**

| | | |
|---|---|---|
| லகஷம் | - | லட்சம் |
| கேழ்க்க | - | கேட்க |
| விருக்ஷங்கள் | - | விலங்குகள் |
| ராக்ஷதி | - | ராஜாதி |
| ரக்ஷிக்க | - | காப்பாற்ற |
| பூஷணங்கள் | - | ஆபரணங்கள் |
| புஷ்பம் | - | பூ |
| பொக்கிஷம் | - | சேமித்து வைத்த பொருள் |
| சாக்ஷியாக | - | சாட்சியாக |
| ஸ்திரி | - | பெண் |

| | | |
|---|---|---|
| ஸந்தோஷமாக | - | மகிழ்ச்சியாக |
| காக்ஷி | - | காட்சி |

இக்கதை "சீவகசிந்தாமணி"யின் சாயலாக உள்ளது. சுவடியில் அதிக எழுத்துப் பிழை உள்ளது. இதனை தாள் சுவடியாகவும் பிரதியெடுத்துள்ளனர். இப்பதிப்புக்கு அத்தாள் சுவடியையும் உதவி நூலாக பயன்படுத்திக் கொண்டேன். சுவடியில் சிதைந்த எழுத்துகளை (......) என்ற குறியீட்டால் நிரப்பி உள்ளேன். இதே சுவடி உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலும் உள்ளது.

## நன்றியுரை

சுவடியியலை பட்டயப் படிப்பாக வைத்துள்ள சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும் முதுகலையில் சுவடி பற்றிய புரிதலையும் மாணவர்கள் பெற வேண்டும் என்று மாணவர்களை ஊக்கப்படுத்தும் தமிழிலக்கியத்துறைத் தலைவரும் எனது சுவடியைப் பதிப்பிக்க அனைத்து நிலைகளிலும் நெறியாள்கை செய்தவருமான பேராசிரியர் **வீ. அரசு** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வகுப்பு எடுத்த பேராசிரியர் **ய. மணிகண்டன்**, விரிவுரையாளர் **இளங்கோ, லதா** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கீழ்த்திசை சுவடி நூலகத்தார்க்கும் சுவடியைத் தேர்ந்தெடுக்க உதவிய **ஐய்யனார்** அவர்களுக்கும் என் நன்றி.

கணிப்பொறி அச்சு செய்து இப்பதிப்பேட்டை வடிவமைத்துக் கொடுத்த **இரா. மோகனலட்சுமி** அவர்களுக்கும் என் குடும்பத்தார்க்கும் நண்பர்களுக்கும் என் நன்றி!!!

# வீரதுரங்கராஜன் கதை

விசை(ய) நகரமென்றொரு பட்டணமுண்டு. அந்த பட்டணம் எப்படியிருக்குமென்றால் இரும்பினால் கட்டின கோட்டையும் அந்தக் கோட்டைக்குப் பதாதிசெனமான அகிழும் நாலுவாசலுக்க மன்னூறு கிங்கலியரும் மகாமேருவுபோலே தோன்றி யிருக்கப்பட்ட உப்பரிகையும் சப்தயாகரமளவாய் துற்கமும் மந்திரகிரியும் மகாவனங்களும் பச்சையாறும் பச்சை தோப்பும் சந்தன தடாகமும் கற்பூரகடலும் களப கஸ்தூரியும் ந ... சாலையும் முத்து மாளிகையும் தெத்து சாவடியும் கொலுமண்டபமும் சங்கீத சாயுச்சிய வங்கார் சிங்காரமும் சல்லித்திரள்களும் புலித்தோல் பரிசைகளும் தினாயிடுவாசலும்.

சித்திர முகப்பும் இருபதுலக்ஷம் ராசாக்களும் நாற்பது லக்ஷம் காலாளுகளும் பனிரெண்டு லக்ஷம் குதிரைகளும் மூன்று லக்ஷம் யானைகளும் சதிரங்க சேனையோடும் கூடி இந்திர பதவியாக விசை (ய) நகரத்தில் வாழப்பட்ட வீரதுரங்கனென்றொரு ராசாவுண்டு. அந்த ராசாவின் வாசலிலே மந்திரியாயிருக்கப்பட்ட தத்வப் பிரகாசனென்றொரு மந்திருயுண்டு. அந்த மந்திரி நகர ராஜ்ய பாரருமெல்லாம் அந்தராசா ஒப்பிக்கொடுத்து அந்த மந்திரி மொழிக் கேட்டு ராஜ்யபாரம் பண்ணிக் கொண்டு இறக்கிற நாளையிலே மந்திரி சொல்லுகிற விருத்தம்:-

மன்னவன் வீரதுரங்கன் மந்திரி வெல்கேட்டு
அன்ன அகந்தைகுன்றி அரசழிந்திருக்கும் நாளில்
தன்னவன் படைவீ டேகி தவிலறு முழங்கக் கோட்டு
மின்று போம் பொதுவில் நோக்கி வேட்டையென்றமச்சன் சொன்னான்
அமச்சனார் மொழியைகேட்டு அரசனும் மகிழ்ந்து நன்றாய்
நீமித்த கணமுழிக்குமுன்னெ யிந்திநினவே தோணி
அமச்சனும் பரிமேற்கொண்டு அரசனும்கரிமே நன்றாய்
சமைத்திடஅதின்மேல் கொண்டு சாவமாங்கரி மேல்சேந்தார்.

**வசனம் :**

சற்பமாங்கிரியின் பர்வதத்திலே மந்திரியும் ராசாவும் பிள்ளைமாற் பிறவுகளும் கூறியெறி வேட்டைக்குப் போனார்கள். அப்போ யானை, குதிரை, சதிரங்க சேனையும் மலையேற மாட்டாமல் மலைசருவில் நின்று போச்சுது. அந்த ராசாவு மந்திரியு பிறகேப் போன பிள்ளைமாற்களும் ஒரு திக்கிலே பிறிந்து போன படியினாலே ராஜாவே கூடிக் கொண்டு உச்சி மகாபர்வதத்திலே மத்தியான காலத்திலே போன போது அந்த ராசாவுக்கு தண்ணீர் தாகமெடுத்தது தண்ணீர் வேணுமென்று மந்திரியை கேட்டான். அப்போ அந்த மந்திரி நல்லது வாருமென்று கற்பகத் தருவுடைய தடாகமுண்டான கண்ணாடி சுனையிலே கூட்டி வந்தார். அப்போ அந்த சுனையருகே ஒரு குத்துக்கல்லு நட்டு இருந்துது. அந்த குத்துகல்லுலே பழமொழி எழுதியிருந்ததது.

அந்த பழமொழியை ராசா கண்டு வாசிக்கிறபோது யாதாமொரு ராசாக்கள் மந்திரி பேச்சைக் கேட்டு நடந்த

ராசாக்கள் அவர்கள் நாளதுவளாயிலேயும் கெட்டுப் போவார்கள் என்று எழுதியிருந்தது. அப்போ ராசாவானவன் வெகுவாய்கிலே சிந்து மனதிலே எண்ணுதெல்லாம் எண்ணி குஞ்சிரிப்பாயி சிறிச்சு கொண்டு நிற்கிற தருவாயிலே மந்திரியானவனிருந்து இனி நாம் ராசாவே கூட்டிக் கொண்டு பட்டணமே போயி சேர்ந்தால் நம்ம ஆக்கினை பண்ணிப் போடுவான். அந்த ராசாவே இங்கே தானே சதி செய்ய வேணுமென்று மனதிலே எண்ணிக் கொண்டு ராசாவை மந்திரி பார்த்து வாருமய்யா முன்காலத்திலே புத்தியில்லாத பேர்கள் எழுதி வைத்த எழுத்தைக் கண்டு தேவரீர் மவுனமாயிருந்தால் தண்ணீர் எறச்சத் தாறேன் வாருமென்று கூட்டிக் கொண்டு போயி ராசாவைச் சுனையிலே தள்ளிப் போட்டு நிற்கிற தறுவாயிலே அந்த உச்சிமலை பிள்ளையாரை பூசை பண்ணுகிற பிராம்மணன் அந்த பிள்ளையாருக்கு சாத்தத்தக்கதாக வில்வமரத்தின்பேரிலே ஏறி வில்வ பத்திரம் எடுக்கிறவன் கண்டு ராம ராமா வென்று ரெண்டு செவியைய்யும் மூடிக் கொண்டு மரத்தை விட்டு கீழே இறங்கி அந்தப் பிள்ளையாருக்கு பூசை பண்ணாமல் மெத்தக் கிலேசித்து இந்தப் பாவத்தை யிந்தப் பாதகன் எத்தனை நாளைக்குத் தெரிலக்கப் போறான். அவன் யீடேரப் போறதில்லை இந்த ராசாவை போலே யினி ஒரு ராசா நிதியனுகி கெழவி இதுகளையறிந்து கேட்கப் போறானோவென்று வெகுமனமடிவாயி தன்னுடைய வளவிலே வந்து பிறமத்தி பிடித்த போலேயிருந்தான்.

அப்போ அந்த நம்பியான பெண்சாதியிருந்து பூசை புலக்காரமில்லாமலும் அண்ணம் தம்பிமார் வேண்டாமலும் துர்க்கித்திருக்கி வந்த விபரமேதென்று அவன் பெண்சாதிக் கேட்டு நம்பியானனெது சொலன் - "வாறாய் பெண்ணே! நான் கண்ட பாவத்தை உன்னுடனே சொன்னால் தெரியுமோ அல்லவென்று மத்த பேருடனேச் சொன்னாலும் தெரியுமோ? ஆனால் மனுஷராய் பிறந்த பேருக்கு புத்தியுண்டாக வேணும். புத்தியுண்டான கண்ணிலே கண்ட தொறமு மனதிலே எண்ணின பாவமுந் ஆகாதென்று தோஷமும் பரிகரித்துக் கொள்ளுவார் களென்று. அப்படிப் போலே நான் கண்ட பாவத்தை நானேயனுபவிக்க வேணுமே யல்லாது மற்ற பேருக்கு சொன்னாலந் தெரியப்போகுதோ இவன் கண்ட பாவ மதிர் காசிக்குப் போய் வந்து சொல்லுகிறதே யல்லாமல் மற்றபடி சொல்லப்போகாது என்ற நம்பியான் சொல்ல அவன் பெண்சாதியிருந்து வாருமய்யா பெண்சாதி செய்த பாவம் புருஷனுக்குச் சொல்லவேணும். புருஷன் செய்த பாவம் பெண்சாதிக்குச் சொல்ல வேணும்.

அல்லாதிருந்தால் குருக்கள் ராசாக்கள் பெத்த பிள்ளை தன்னுடைய குலை சிநேகிதருக்கும் இப்படிக் கெரத்த பேருடனே சொன்னால் தோஷம் நிவாரணமாம் என்றுபெண்சாதி சொல்ல நம்பியானிருந்து நான் காசிக்குப் போயிவந்து சொல்லுகிறதேயல்லாமல் மத்தபடி சொல்லுகிறதில்லை என்று திட்டெண்ணு எழுந்திருந்து காசிக்குப் போனான். அவன் பெண்சாதியானவளிருந்து புருஷன் மக்கு உத்த விசேஷம் சொல்லாமல்

போனானென்று தெய்வமே என்று வெகுவாய்த்துற்கித்துக் கொண்டு இருக்கிற நாளையிலே வேட்டைக்குப்போன மந்திரியானவன்.

ராசாவை சறப்பினை செய்து கொண்ணுப் பொட்டு ஒருவனா தானே புறப்பட்டு ஓடி வந்தான். அப்போ பிள்ளைமார் பிறவுமிருந்து ராசா எங்கே எண்ணு கேட்டான். அப்போ ராசாவும் நானுமாய் கண்ணாடிச் சுனையிலே தண்ணீர் குடிச்சு வரச்சே ஒரு வேங்கைப்புலி கண்டுயிருவரையும் முடிக்கி கொண்டுவது அப்போ ராசா ஒரு திக்கிலே நான் ஒரு திக்கிலே போனோம். நான் வந்தேன், ராசாவைக் காணோமென்று மந்திரி சொன்னவுடனேப் பிள்ளைமார் பிராம்மணரெல்லோரிடமிருந்து ராசாவை இழந்து விட்டுதென்று சதுரங்க சேனையுங் கூட்டிக் கொண்டு கண்ணாடிச்சுனையும் செடியும் மலையும் இதுகளெல்லாம் மூணுநாள், ஆறுபொழுது தேடியும்

காணாமல் வெகுவாயிதுககித்தக் கொண்டு இருக்கிறபேரை மந்திரி பார்த்து நாம் பட்டணத்தை போவோம் வாருமென்று மந்திரி சொல்ல பிள்ளைமார் பிராம்மணரெல்லாருமிருந்து பட்டணத்தில் போனால் அங்கேயிருக்கிற கார்யகாரருக்கும் ராசாதேவியும் ராசா எங்கே என்று கேட்டால் அவர்களுக்கு என்ன புத்தி சொல்வோமென்று சொன்னவுடனே மந்திரியானவன் அவர்களைப் பார்த்து வெகுவாய் கோபிச்சுக் கொண்டு நாம் என்ன செய்வோம்? ராசாவைக் கொன்றுப் போட்டோமா? புலி கொன்றுவிட்டு போனதுக்கு

நாமென்ன செய்வோம்? பட்டணத்துக்கு துரையில்லை என்றெல்லாம் ஆலோசனை பண்ணுகிறீர்கள்.

அந்த பட்டணத்துக்கு நானே இருக்கிறேன். அந்த ராசா எப்படி நடத்தி வைத்தானோ அப்படி உங்களையும் நன்றாய் நடப்பிக்கிறேன், வாருங்களென்று நம்பிக்கை சொன்னான். அப்போ எல்லா மந்திரியை யானை மேலே வைத்துக் கொண்டு பட்டணமே வந்து ராசா வேட்டைக்குப் போன இடத்திலே புலி ராசாவைக் கொன்று போட்டதென்று அந்த பட்டணமெங்கும் அறிக்கை பண்ணி பட்டணத்துக்கு ஆளில்லாத படியினாலே மந்திரி தானே பட்டாபிஷேகமும் தரித்துக் கொண்டு இருக்கிற நாளையிலே அந்த மந்திரியானவன் ராசாவின்

தேவியை கைவசமாக்கிக் கொண்டு கொள்ள வேண்டுமென்று அவளுடைய அரண்மனையிலே வந்து தாதிமார் ஊழியக்காரனை அழைத்து அவளுக்கு வேண்டிய ஆடை ஆபரணமெல்லாம் கொடுத்து அவர்களையும் உறவு பண்ணிக் கொண்டு அரண்மனை வாசல் நாலாங்கட்டு வாசலிலே நின்று கொண்டு பெரியதாதியை அழைத்து ராசாவின் தேவியிருக்கிற விபரமென்னவென்று கேட்க தாதி சொன்ன விருத்தம் :-

மன்னவன் தேவியாருக்கு மாஸமும் மூணதாகும்
அன்னவள் கெற்பமாக ஆகினாள் ஆனகாலை
பிள்ளையு மயீணம்வந்து பிழைவரும் பீடைஆன
கன்னியைக் கொண்டு கொல்லில்காரியம் நல்லதென்றாள்.

எ-து. வாராய் மந்திரி ராசாவின் தேவி மூன்று மாசம் கற்பமாயிருக்கிறாள். அவள் வயிற்றிலே ஆண்பிள்ளை பிறந்ததே உண்டானால் பின்னாலே உமக்கு சீவனுக்கு லயம் வரும். அந்த ராசாவின் தேவியை கற்பினைப் பண்ணிப் போட்டால் உமக்கு ஒன்றுமில்லை என்று தாதி சொல்ல மந்திரி வெகுவாய் சந்தோஷப்பட்டு நல்ல புத்தி நமக்குச் சொன்னதே போதும் என்று இன்றைக்குக் கூடாது நாளை வந்து செய்வோம் என்று கொலுவிலிருக்கிறபோது அவளுடைய அழகு எப்படி இருக்குதோ எண்ணில் நாளைய தினத்தில் ராசாவின் தேவியை தங்களண்டைக்கு அழைத்துக் கொண்டு வருகிறறேனென்று சொல்லி மந்திரியை போகச் சொன்னாள்.

பிறகு இவள் ராசாவின் தேவியண்டைக்கு வந்து மந்திரி சொன்ன விருந்தோம் பலெல்லாம் சொன்னாள். அது கேட்டு ராசாவின் தேவி இவ்விடத்திலே இருந்தால் அபகீர்த்தி வருகிறதென்றும் பிராண ஆனி வருகிறதென்றும் நினைத்து உடனோடு அந்தப் பட்டணம் விட்டு இருகாத வழிக்கப்பால் ஓடிப்போனாள். அங்கே சந்திரகிரியென்று ஒரு பட்டணமிருக்கிறது. அந்த பட்டணம் போய் சேர்ந்து கூலிக்குக்குத்தியும் விரகொடித்துவித்தும் இப்படியாக பிழைத்துக் கொண்டு இருக்கிற நாளையிலே அவளைக் கண்ட பேரெல்லாரும் அவளுடைய நடையழகும் ரூப சௌந்தரியத்தையும் கண்டு இவள் விறகு வித்தவள்ளல்லா ராசாவின் குமார்த்தி போலே இருக்குது எண்ணு அந்த பட்டணம் ஆளப்பட்ட ராசாவுக்கு அறிக்கையிட்டார்கள்.

அந்த ராசா தம்முடைய சமூகத்துக்கு அவளை அழைத்து வரச் சொல்லி தம்முடைய முத்திரை மனுஷரை அனுப்பினார். அவன் போய் ராசாவின் தேவியை அழைத்துவரச் சொன்னாரென்று சொல்ல அதுக்கு அவள் சொன்னது. ராசாவுக்கும் நமக்கும் என்ன காரியமிருக்கிறது? நான் வரத்தக்கனதில்லை போ என்றாள்.

அந்த விசேஷம் கேட்டு வந்து ராசாவுடனே சொல்ல பின்னையுமேது சொல்லுகிறான். அவளுடைய அழகு எப்படி இருக்கிறதென்றால் அந்த ஸ்ரீ அருந்துதி சந்திரமதி ஊர்வசி திலோர்த்தமை காமபொதி இந்திராணி ரதி இவர்களுடைய அழகு போலே இருந்தபடி கண்டு பசுபதியான மந்திரிகண்டு மெத்த மனசிலே எண்ணிக் கொண்டு அந்த ராசகுமார்த்தியண்டைக்கு வந்து தெண்டம் புண்ணி வாராயம்மா, நீ யாருடைய கோத்திரம்? நீர் எந்த தேசத்திலிலேயிருந்து வந்தீர்களென்று பசுபதி என்கிற மந்திரி கேட்க ராசகுமார்த்தி சொல்லுகிறாள். வாரும் தம்பீ பரதேசிக்கு இன்ன தேசமென்று இருக்குதோவென்று சொன்னாள்.

அதன்பிறகு மந்திரியானவன் மமைடிவாயி ராசாவின் அண்டையிலே வந்தான். அப்போ திறவிலோசனனென்கிற ராசாயிருந்து என் மந்திரி போன காரியம் என்னவென்று கேட்க அப்போ மந்திரி சொல்லுகிறான்.

வாருமய்யா அந்தப் பெண் உமக்கே பாரியல்லாமல் மத்த பேருக்கு தேவியல்லா ஆன படியினாலே அவளை சிலார பண்ணலாகாது தேவரீர் வந்து அவளுடைய அழகு

சௌந்தரியத்தைப் பார்த்து அதன்பிறகு அவளுக்கேற்ற உடம்படிக்கை சொல்லி அழைத்து வருவோம் என்று மந்திரி சொல்ல ராசாவானவன் நல்லதென்று இருவருமாய் வந்து ராசாவின் தேவியைக் கண்ட மாத்திரத்திலே ராசாவானவன்.

வெகு மோகமாகி ஒன்றும் தெரியாமல் பைத்தியம் பிடிச்சாப் போலே இருந்தான். அப்போ ராசாவின் தேவியானவள் நம்மை மோசம் பண்ணுகிற வழியாயிருக்கிறதென்று இருந்த இடம் விட்டு அப்புறம் போய் திருச்சாவடியிலே போயிருந்தாள். அப்போ ராசாவுக்கு மயக்கமதிந்து நினைவு வந்து அந்தப் பெண்ணெங்கே என்று கேட்டாள். அப்போ மந்திரி சொல்லுகிறாள்.

நம்முடைய திருச்சாவடியிலே போயிருக்கிறாள் என்று சொன்னாள். அப்போ ராசா கோவித்துக் கொண்டு சொன்ன விருத்தம்:-

அந்த மின்னழகையிகண்டு அரசனுக்குருகிநெ. . .
இந்த லோகத்தில் காணேன் இராச
கோத்திரமேயாகும்
மந்திரிவாராய் இந்த வனிதையே நெஞ்சமாதே

பிணத்தருகில் சோர்ந்து சாற்ங்கமிதிர்க் கூட்டி வாவென்று சொன்னாள்:-

உரைத்தபின் அவனும் சென்று உகந்துடன் வணங்கிப் போற்றி
தறமிசை மதிக்க வந்தாதாரணி மன்னன் தானும்

உரைத்தனத்தழகு போன்ற வஞ்சியே கூட்டி வாவென்று
உரைத்திட வந்தேனம்மா உண்மை தானுரைக்க வாரீர்.
எண்ணவ னுரைக்க மாது யிருகண்ணீர் சொரிய நின்று
நன்றெனவே சொல்லி நகை புரிந்துருகி நெஞ்சம்
கன்றிமுன் மனக்கெ சென்றாக்கழுக்கேன வருவேனென்றாள்
அன்னையாளுரைக்க மந்திரி அறமனைத்தன்றிச் சென்றாள்

எ.து:- இப்படி சொல்லிஅந்த மந்திரியைப் போக விட்டு பாதி இரவிலே புறப்பட்டு காட்டாரும் காடுமலையும் கடந்து விருக்ஷங்கள் வாழும் வனங்களும் கடந்து போய், பேய் பிசாசு உள்ள வனமும் கடந்து வருகிற வழியிலே ஒரு ராக்ஷதி இரை கிடையாமல் நாலஞ்ச நாளாயிருந்து அன்றைக்கு இரை தேடி வருகிற போது இந்த ராசாவின் தேவியைக் கண்டு நமக்கு நல்ல உத்தமமான இரை கிடைத்தது என்று

சொல்லி ஓடிவந்து பிடித்தவளவிலே ராசாவின் தேவி ஏதுமற்ற பயந்து கிலி பிடித்து ஒன்றும் தெரியாமல்த் தானே நின்றாள். அப்போ அந்த ராக்ஷதி ராசாவின் தேவியைக் கெபியண்டையிலே நடத்திக் கொண்டு போகும்போது ராசாவின் தேவிக்கு நினைவு வந்து நாலு திரையும் பார்த்துமெற்ற பாதவித்து "சிவ சிவா ஆதிமூலமே ஆதிமூலமே!" என்று அபயமிட்டாள். அந்த சத்தத்தை அந்த வனத்திலே இருக்கப்பட்ட பத்திரகாளி கேட்டு நாமிருக்கிற வனத்திலே நம்முடைய சகோதரனான விஷ்ணுவையும் மைத்துனனாகிய சிவனையும் நினைத்து அபயமிட்ட பேர் ஆரோ தெரியாது.

அந்த அபயத்தை விசாரிக்க வேணுமென்ற கபால சூலத்துடனே வெகு உக்கிரத்துடனே புறப்பட்டு வருகிற போது அந்த ராக்ஷதி பத்ரகாளியையும் வருகிற அதட்டி கண்டு ராசாவின் தேவியை விட்டு ஓடிப்போச்சுது. அப்போ பத்திரகாளி பயப்படாதே என்ற ராசாவின் தேவிக்கு பயத்தி தவிர்த்த என் பெண்ணெத்தினி வழியே ஒருத்தியாய் வந்தாய் என்று பத்திரகாளி கேட்க ராசாவின் தேவியிருந்து வாருமம்மாள். என்னுடனே கோத்திரம் ஏதென்ற கேள்விக்கு நீர் என்னுடைய சீர்மையானது விசைய நகரமென்றொரு பட்டணமுண்டு. அந்த பட்டணமாளப் பட்டவன் என்னுடைய கணவன் போர் வீரதுரங்க னெனப்பட்ட ராசா.

அவர் வாசலிலே இருக்கப்பட்ட தத்துவப் பிரகாசனென்னப்பட்ட ஒரு மந்திரியுண்டு. அந்த மந்திரி கையில் சகலமும் ஒப்பிக் கொடுத்து அவன் ஆணை ஆக்கினைகளுக்கு உள்பட்டுக் கொண்டு இருக்கிற நாளையிலே என் புருஷனை அந்த மந்திரி வேட்டைக்குப் போய் வருவோம் வாருமென்று கூட்டிக் கொண்டு போய் கொண்ணுப்போட்டு பட்டமே வந்து தான் பட்டமுங்கட்டிக் கொண்டு என்னையும் கொல்லுகிற வழியாயிருந்தான்.

அந்த சேதி அறிந்து ராவிலே புறப்பட்ட இருவதிங்காத வழியிரவும் பகலுமாய் ஓடிவருகிறபோது அங்கே ஒரு சந்திரகிரி என்றொரு பட்டணமிருக்கிறது. அந்த பட்டணத்திலே வந்து தினமானம் பட்டணத்திலே

விரகு விற்று தினமானம் வயிறு வளர்த்துக் கொண்டிருந்தேன். அந்தப் பட்டணத்திலே இருக்கப்பட்ட திரவிலோசனன் என்றொரு ராசாவும் பசுபதி என்றொரு மந்திரியும் இவர்கள் என்னை மோசம் செய்ய நினைத்தார்கள். இந்த சேதியை அறிந்து இந்த வனத்திலே ஓடி வந்தேன். அப்போது அந்த ராக்ஷதி என்னைப் பிடித்து தின்ன குகையிலே கொண்டு போகிற போது உன்னை கண்டுவிட்டு ஓடிப்போனாள். நானும் மூணு மாதம் கர்ப்பஸ்ரீயாய் இருக்கிறேன்.

இதைக் கண்டு இதங்கி நீயும் விட்டாலும் நல்லது பொசித்தாலும் நல்லதென்று ராசாதேவி சொல்ல பத்திரகாளி இருந்து வாரும் பெண்ணே உனக்கு ஒரு நாளும் அழிவு வராது. உனக்கு மனது பொரிந்தின விடத்திலே போயிருந்து கொண்டு புத்திரனையும் பெற்றுக்கொண்டு உன்னுடைய பட்டணமே சேருவாய் என்று ஆசீர்வதித்து வேண்டிய பாக்கியமும் கொடுத்து அனுப்பினாள். அப்போது ராசாவின் தேவியிருந்து வாருமம்மாள் நீர் எனக்கு மாதா, பிதா, குரு, தெய்வம். உன்னை தோத்திரம் பண்ணிக் கொண்டு இருப்பேனென்று தொண்டம் பண்ணி அந்த பத்திரகாளி கையிலே அனுப்பி வச்சுக் கொண்டு வருகிறபோது அங்கே ஒருத்தி புருஷனுடனே உடன்கட்டை ஏறினாள்.

அந்த நெருப்பு அகோரமாய் கொழுந்துபட்டு எரிந்த படியினாலே அத்தை ஊரென்றெண்ணி கிட்டபோய் பார்க்கிற போது சுடலையாகத்தானே இருந்தது. தெய்வமே

என்று நொந்துக் கொண்டு அந்த வனமும் கடந்து அப்புறம் போகிறபோது அருகே சுறுணையாறு அகோரமாய் பெருகி வந்தது. அந்த ஆற்றங்கரையிலே வந்து நின்று அக்கரைக்குப் போகவேண்டுமே ஒருவர் துணையுமில்லை. நீந்திக்கரை ஏறவென்றாலும் உதவில்லை என்று மெத்த பரிதவித்துக் கொண்டு வருகிறபோது அந்த ஆற்றங்கரையிலே ஒருவனை வெட்டிக் கழுப்போட்டு இருந்தது. அவனைக் கண்டு ராம ராமா! சிவ சிவா! இந்த பாவத்தையும் கண்ணினாலே பார்க்க விதித்தாயே பிரம்ம தேவனே! என்று அப்புறம் போய் இருந்து கொண்டு மெத்தவும் துயரப்பட்டு கண்கலங்கி நிற்கிற போது அப்போ ராசாவின் தேவியான வளுக்கு ஒரு நினைவு வந்தது.

அதெப்படி என்றால் பூலோகத்திலே இருக்கப்பட்ட நரசென் மத்திய தரித்திரவான் பெரியவனோ செத்த பிணம் பெரியவனெயதல்லாமல் பிள்ளை பெரியவனோ கோபமுடையவன் பெரியவனோ இவர்கள் ஐந்து பேர்களில் பெரியவனானென்றால் செத்தபிணம் பெரியதென்று பெரியோர்கள் சொல்லி இருப்பார்களல்லவா என்று மனதிலே எண்ணிக் கொண்டு அந்த கழுவினத்தான் பிடுங்கை தெற்பையாகத்தானே சேத்துக் கொண்டு சுருணை ஆற்றையும் தாண்டி அப்புறம் போகையிலே அங்கே கோழி குரல் செத்தங்கேட்டு அந்த சத்தத்தின் வழியே வந்து பார்க்கிறபோது அங்கே அரசனாபுரி பட்டணமிருந்தது. அந்த பட்டணமாளுகிற ராசா சூராதி சூரனென்று பேருங்கேட்டு இனி நாம் இந்த பட்டணத்திலே போயி இருந்தாலும் இவனும் நம்மை கற்பழிப்பானே தெய்வமே

என்று நான் இனி எங்கே போகப் போகிறேன் என்று மனதிலே துயரப்பட்டுக் கொண்டு நிற்கிற தருவாயிலே அந்த பட்டணத்துக்கு கிழக்கே ஒரு பரச்சேரி இருந்தது.

அந்த பரச்சேரியிலே போயிருப்போமென்ற மனதிலே நினைத்துக் கொண்டு வந்தாள். அங்கே ஒரு விருக்ஷமிருந்தது. அந்த விருக்ஷத்தின் கீழே இருந்து புலம்பிக் கொண்டிருந்தாள். அப்போ பொழுது விடிந்தது. அதன் பிறகு அந்த சேரிக்கு முகனையாயிருக்கப்பட்ட ராகு சிங்க என்றொரு பறையனுண்டு. அந்தப் பறையன் கண்டு, "என்னம்மா புலம்பிக் கொண்டிருக்கிறாயே? நீ எந்த தேசம்? நீ யாருடைய கோத்திரம்? நல்லப் பிள்ளையாயிருக்கிறாய். இந்த பரச்சேரியிலே வந்த விபரமேதென்று" கேட்டவுடனே ராசாவின் தேவி சொன்ன வெண்பா:-

கூறுபட்ட மன்னன் குறைத்த வண்ணனெத் தனித்து
வெறுபட்டெனணணெ விறகு வித்தேன்
கீறி மன்னவனுயென்னை விலைதழிக்கவே துணிந்தான்
உன்னிடத்தே வந்தேனுகந்து

**வெண்பா :**

ஒளியாகி வந்தேன் ஊரீது யெனனெண்ணி - என்னெ
னெளி யொற்குச் சொல்லென்றியம்பி வழியாக
வந்தவரெல்லாம் வகை வகையாதான் கொடுத்து
தந்திரமாய் சொன்னாள் தத்தளித்து

**வசனம் :**

வாராய் பெண்ணே! என்னுடைய குலமும் கோத்திரமும் கேட்டீரல்லோ. ஆனால் சொல்லுகிறேன்

கேளும். அது எப்படி விசை விசய நகரமென்றொரு பட்டணமுண்டு. அந்த பட்டணத்துக்கு அதிபதியான வீரதுரந்தா னென்றொரு ராசா உண்டு. அந்த ராசா என் கணவன். என் வாசலில் இருக்கப்பட்ட தத்துவப் பிரகாசனென்றொரு மந்திரியுண்டு.

அந்த மந்திரியானவன் கையிலே ராஜ்யபாரம் எல்லாம் ஒப்பிக் கொடுத்து அவன் கீழே வணங்கிக் கொண்டு இருந்தார். என்னுடைய கணவன் இப்படி இருக்கிற நாளையிலே ஒரு நாள் அந்த மந்திரி என் கணவனான வீரதுரங்க ராசா வேட்டைக்குப் போய் வருவோமென்று கூட்டிக் கொண்டு போய் சறப்பினை பண்ணிக் கொண்டு போட்டு வந்து ராசாவை புலி கொன்றுப் போட்டதென்று பிற்பாடு பட்டணத்திலே ஆள் இல்லாது போனபடியினாலே

தான் பட்டமுங்கட்டிக் கொண்டு என்னையும் சேர்த்துக் கொல்லுகிறோமென்று எண்ணினான். அப்போது நானிந்த சேதி கேட்டு பாதி இரவிலே முப்பது இரண்டு வாசலும் கடந்து கோட்டைக்கு அப்பால் வந்து பதிங்காத வழிபோறபோது அங்கே சந்திரகிரி என்றொரு பட்டணமிருந்தது. அந்த பட்டணமாளப்பட்ட திரவிலோசனனென்கிற ராசா அவன் வாசல் மந்திரி பசுவதியாகிற மந்திரியும் ராசாவும் ராச்சிய பாரம் பண்ணிக் கொண்டு இருப்பார்கள். அந்த பட்டணத்திலே வந்து விறகுவித்து வயறு வளர்த்துக் கொண்டிருந்தேன். அந்த பட்டணமாளப்பட்ட திரவிலோசனராசா வந்து விறகு

வித்து வயறு வளர்த்துக் கொண்டிருந்தேன். அந்த பட்டணமாளப்பட்ட திரவிலோசனராசா வந்து விறகு வித்துக் கொண்டிருக்கிற சேதியைக் கேட்டு

பசுபதி எனப்பட்ட மந்திரியை அழைத்து தம்முடைய பட்டணத்திலே ஒரு பெண்சாதி ஒருத்தி விறகு வித்துக் கொண்டிருக்கிறாளாம். அவளைப் போலே பெண்ணிலே ரூபமான பேரில்லையாம். அவளை நம்முடைய அரண்மனையிலே உபாயத்துனாலே அழைத்துக் கொண்டு வரச்சொல்லி மந்திரியை அனுப்ப அப்படி தானே ஒரு நாழிகையிலே அழைத்துக் கொண்டு வருகிறோமென்று ராசா கையிலே அனுப்பிவிச்சுக் கொண்டு மந்திரி நாமிருக்கிற இடத்திலே சர்வபாண பூஷணங்கள் ஆடை ஆபரணங்கள் தருகிறோமென்ற முகவசீகரமாக பேசி உல்லாசம் பண்ணி வச்சிரமணி மேடையிலே என்னை வரச்சொல்லி அழைத்தார்கள்.

நானும் வலையில் கபடமானுபோலவும் உலையிடு விடும் மெழுகு போலும் நடுநடுங்கி நாம் ராசாவையுமிழந்து மரு மண்டலத்து ராசாவின் பட்டணத்திலே விறகு விற்றுப் பிழைக்கலாமென்று வந்தேன். வந்த இடத்திலே இந்த விதி வருவானென்று உள்ளம் பதறி மனதிலே அடக்கி என்னை அழைக்க வந்த பேர்களுக்கு முகம் கோணாமல் சந்தோஷமாகப் பேசி சறுவ சுத்தி பண்ணிக் கொண்டு பாரிபடுகளமொடுங்கின உடனே வச்சிர மணி மேடைக்கு வருகிறனேன்று தன்னை அழைக்க வந்த பேர்களுக்கு சந்தோஷமாகும் படிக்கு சொல்லி அனுப்பி அன்னேரமே

புறப்பட்டு அவர்களையும் தப்பவித்துக் கொண்டு போகிற போது அங்கே வெகுவாய் காடு செடி மண்டி வழித்துறை தெரியாமல் இருந்தது. இதற்கு என்ன செய்வோமென்று நிற்கிற தறுவாயிலே அந்த வனத்திலே இருக்கப்பட்ட ராக்ஷதி என்னைக் கண்டுபிடித்துக் கொண்ட தின்ன வேணுமென்று ஒரு குகையிலே நடத்திக் கொண்டு போனாள்.

அப்போ நான் மெத்த பயந்து சிவ சிவா ராம ராமா என்று அழுதேன். அப்போது அந்த வனத்திலே இருக்கப்பட்ட பத்திரகாளி கேட்டு ஓடி வந்து என்னை மீட்டு விட்டாள். அப்போ அந்த வனமும் கடந்து அப்புறம் போகிறபோது பெண் சாதியும் புருஷனும் உடன்கட்டையாம் வெந்தார்கள். அத்தையும் பார்ப்போம் என்று கிட்டப் போய் பார்த்து அப்புறம் போகிறபோது அங்கே சுருணை ஆறென்று ஆறு வந்தது. அது கடல் போலெ பெருகி வந்தது. அதுக்கு என்ன செய்வோமென்று மனதிலே துயரமாய் வருகிறபோது ஒருவனை வெட்டிக் கழுவிலே போட்டு அஸ்தியாய் காய்ந்து இருந்தது. அத்தை ஆபத்துக்குப் பாவமில்லை என்று கழுமரத்தைப் பிடுங்கி தெற்பையாக தெரித்துக் கொண்டு இக்கரை ஏறி இங்கே வந்தேன்.

நீ எனக்கு மாதா, பிதா, குரு, தெய்வமென்று நம்பி வந்தேன். நானொரு பிறவி வேணுமென்றால் இந்த சேரியிலே ஒரு இல்லறமும் கட்டிக் கொடுத்து என்னையும் ரக்ஷித்தால் உனக்கு வார்த்தையும் கீர்த்தியுமுண்டு.

அதுவுமில்லாமல் ஒருவரும் மத்தவள் பெண் மேதை மூணு மாதம் கர்ப்பிணியாய் நீ என்னை ரக்ஷிக்க வேண்டுமென்று தெண்டம் பண்ணினாள். அப்போ பறையன் இந்த விஷயத்தைக் கேட்டு வாராயம்மா நீயுமொரு சூரிவம்மிசமாக இருக்கிறாய். உனக்கு இந்த சேரியிலே இருக்கிறமமோ நீயும் அடியேனிடத்திலே ஓடி வந்தீரல்லோ ஆனபடியினாலே எதுவந்தாலும் காத்துக் கொள்ளுகிறேன். உமக்கு மேல் சாதி இருக்கிற இடத்திலே தானே ஒருவீடு கட்டித் தருகிறேன். நீர் இங்கே தானே இருமென்று பறையன் சொல்ல ராசாவின் தேவி இருந்து வாராயண்ணே நான் மேல்சாதி இலெதானே கூடி இருந்தால் உன்னை வந்து மேல் புத்தி கேட்க வேண்டுமோ,

நீயுமோ வலங்குடையவன் நீ மானங்காக்க வல்லவ நீ நல்ல புத்திமான் என்று நம்பி வந்தேன். எனக்கு இந்த இடத்திலே தானே ஒரு வீடு கட்டிக்கொடுத்து ஆதரித்தியே. ஆனால் உனக்கு பிறவா நெறியுண்டு என்று ராசாவின் தேவி சொல்ல பறையன் கேட்டு இது நல்ல புதுமையாயிருக்கிறது. சிவனுடைய சோதினைப்படியொழிய மத்தபடியல்லமென்று ம்னதிலே தேத்திக் கொண்டு நல்லது அடைக்கலம் என்று யாதாமொருவர் வந்தாலும் காக்கவேண்டுமென்று பெரியோர்கள் சொல்வி இருக்கிறார்கள் அல்லவோ. ஆனபடியினாலே காக்க வேண்டுமென்று தன்னுடைய பறச்சேரியிலே நல்லயிடமாய் பாத்து பறச்சேரிக்கு தென்புறமாய் ஒரு தளமிருந்தது.

அவ்விடத்திலே நன்றாய் சுத்தம் பண்ணி பச்சை மூங்கில் வெட்டிவந்து கமுக பிளந்து கால்வளையொட்டி கரும்பினாலே வருந்தி தேக்கிலையினால் மெய்ந்து நன்னாயி குடிசையுங் கட்டி வைத்து புது நவபாண்டமுங் கொடுத்து பச்சரிசி, பருப்பு, நெய், பால், தயிர், காய்கறி இதுமுதலான அரிசிவர்கமெல்லாம் ஒன்றுலொன்று குறைவராமல் படிக்கொடுத்து நன்றாய்த் தானே நடத்திக் கொண்டு வருகிற நாளையிலே ராசாவின் தேவிக்கு கர்ப்பம் பத்துமாதமும் சென்று சரீரம் தளர்ச்சியெடுத்து உதிரம் காண்பித்து மொய் பொனொந்து சொன்ன வெண்பா:-

தனித்து முகம் கோணி சங்கு வடமறுந்து
  பணிக்கை மலாக யிகால் பதறி
மனிதரில்லை என்றே புலம்பி இருந்ததறுவாயில்
  சென்றால் கிழவி கவித்து.

எ.து:- முன்னாலே ராசாவின் பெண்சாதியே ராக்ஷதி பிடித்தபோது பயந்து தவித்த பத்திரகாளி தானே ஒரு அவ்வையாராகக் கொளிமூனிக் கொண்டு மருத்துவிச்சி என்று பேருமிட்டுக் கொண்டு அந்த பரச்சேரியிலே ராசாவின் தேவியாண்டையிலே வந்தாள். அப்போ ராசாவின் தேவி இருந்து வாரும் அம்மையாரே நீர் எங்கேயிருந்து வருகிறீர் என்று கேட்டபோது அப்போ அவ்வையாலிருந்து நான் இந்த உர் அர்சுனாபுரி பட்டணத்துக்கெல்லாம் மருத்துவம் பார்க்கிற மருத்துவிச்சி தான் இங்கே ஒரு கார்யத்தைக் குறிச்சு வந்தேன் என்ற அவ்வையார் உடனே ராசாவின் தேவி இருந்து வாரும் அம்மையாரே நான் நல்ல ராசகுலம் ஒரு காரணத்துனாலே

இந்த பரச்சேரியிலிருக்கிறேன் எனக்கு மாதமாக இருக்கிறது. வயறு வலி எடுத்து உதிரங்காண்பித்து இந்த கார்யத்துக்கு கைகொடுத்து ரக்ஷிச்சீரேயானால் உனக்கு என்னுடைய ராகு சிங்களுடனே சொல்லி வேண்டிய ஆடை ஆபரணமெல்லாம் வாங்கித் தருகிறேன் என்று ராசாவின் தேவி சொல்ல அவ்வையாரிருந்து ஏதடி பிள்ளை நீ ராச குலமென்ற சொல்லுகிறாய். இந்த பரச்சேரியிலிருந்து கொண்டு பறயனை அண்ணனென்கிற வயனமென்னா பிறந்த வயணத்தை எனக்குத் தெரியச் சொல்லவேணுமென்று அவையார் கேழ்க்க ராசாவின் தேவியிருந்து இந்தக் கதை எல்லாம் சொல்லுவேன். பிள்ளைக்கு வயறு வலி சொல்லப் போகாது நான் பெத்து பிழைத்ததுக்கும் பிறகு சொல்லுகிறேன். நீர் இந்த ஆபத்தைக் காத்து ரஷிச்சீரேயானால் எனக்கு மாதா, பிதாவென்று காலிலே போய் விழுந்தாள் தெண்டம் பண்ணினாள்.

அப்போ அவ்வையாரிருந்து வாரும் பெண்ணே நீயிவெ சணத்துக்கு அஞ்சாதே நீ பெறுவது புத்திரன் அந்த புத்திரன் பிறந்து ராஜ்யபாரமெல்லாம் ஆளுவாளென்று சொல்லிக் கொண்டுயிருக்கையில் ராசாவின் தேவிக்கு மெத்த வயிறு வலி எடுத்துச் சொன்ன வெண்பா:-

சந்திரனே சூரியனே முறையோ வென்றாள் - சதுமுகனே
மாதவனே முறையோ வென்றாள்
இந்திரனே நான்முகனே முறையோ வென்றாள்
யெளியேனுக் கொருவரில்லை என்னையாள்

. . . . மொந்துலன மகுழல சரிய இடை தள்ளாட
குருவெற்பும் மதிமுகமும் குலாவிவாட
சேந்திருவாய் திருவயறு நொந்து விளய
செல்வனையே யீன்னறெடுத்தாள் தெருதை தானே.

பிறந்த பிள்ளை தன்னை எடுத்து பிரியமுடன் நீருட்டி
சிறந்த எண்ணைதனைப் புகட்டி திருநித்து காப்புமிட்டு
நிறைந்த புகழ் ஆளுவனென்றும் நித்திய கல்யாண
னென்றும் மதியீற்ந்த கலிதித்தானேன்றும் மியம்பினால்காளிதானே.

அந்த ராசாவின் தேவி குமாரனைப் பெத்தாளென்று கேட்டு குரு சிங்கனென்கிற பறையன் ஓடிவந்து வெகுசந்தோஷப்பட்டு ஒருவருமில்லாத வளுக்கு ஒரு புத்திரன் தானே சுவாமி கட்டளையிட்டாரல்லோ. அந்த புத்திரன் தீர்காயுசுவாகத்தானே நன்றாய் இருக்க வேணுமென்று மகாதானம், கோதானம், கன்னிகாதானம், வஸ்திரதானம், பிரும்மண போசனம், மயேசுபரபூண தேவதாயம பீறுமதாயம் அயனவரகசசை பிடாரி இதுமுதலான தேவதைகளுக்கெல்லாம் அபிசேகமும் நைவேத்தியங்களுங் கொடுத்து வெத்தி சங்கு முழங்கி விச்சு விருது விருது உறபங்கட்டி பிள்ளைக்குத் தலைக்கு நீர் வாற்கிற நேரமெல்லாம் பஞ்சாங்கம் சொல்லி திருவாசகம் படிக்க இப்படி மூணு சாமம் பாலுட்டி அஞ்சுமர்தமான பிறகு பொன்னின் காப்பு, வெள்ளிக்காப்பு, செம்பின் காப்புமிட்டு பொன்னின் சதங்கை, வெள்ளி சதங்கை, தங்கச் சிலம்புகளும் மணிந்து நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியும் பார்க்க வளருகிறபோது அந்த

பிள்ளைக்கு சூரியகாந்தி தொட்டிலும் பண்ணிக் கொடுத்து அவையாரே ராகுசிங்கனாகிற பறையன் தெண்டன் பண்ணி வாரும் அவையாரே, இந்தப் பெண் வெகுதுயரப்பட்டு இந்த சேரியில் வந்தாள். வந்தவளை ஆதரிச்சு வீடு வாசலும் கட்டி படிகளுங்கொடுத்து வந்தேன்.

அவள் முன்னாலே கெற்பஸ்ரீ ஆனபடியினாலே ஒரு புத்திரனை பெத்தாள். இந்த பிள்ளையாலே இவள் கடத்தேற வேணும். இந்தப் பிள்ளையை பத்திரமா பாத்து விட்டீரானால் உமக்கு வெகுகோடி புண்யமுண்டாயிருக்கும் என்று பறையன் சொல்ல அவ்வையாரிருந்து வாரும் தம்பி இந்த பெண்ணை நீர் வைத்துத் தாங்கி நீரல்லவோ உமக்குப் புகழும் புண்ணியமும் கிடைச்சுதென்று அவையார் சொன்னத்தின் பிறகு ராசாவின் தேவி ருகுசிங்கராகிய பறையனை நோக்கி சொன்ன விருத்தம்:-

மன்னவன் தனையிழந்து மருநகர விறகுவித்து
அன்னவன் கெற்பமிக்க அவன்தன்னை துணிந்தபோது
நின்னிடத்தருகே வந்தேன் நீயென்னை ரக்ஷித்தாயே
உன்னிட குலத்து பேராய உரைத்து நான் இருப்பேனென்றாள்.

எ.து:- இந்த வசனம் பறையன் கேட்டு தெண்டன் பண்ணி சொன்ன விருத்தம்:-

பேதகமில்லாயின்னம் புலையனைப் பேறாய் சொல்ல
பாதகம் வேண்டாம் தாயே பாரினில்லெ றகுரமாநான்
பூதல மதிக்கவேதான் புரோகிதர்ச் சொற்படிக்கு
மாதவத்துடனே ராசா மாற்கமாய் உரைசெய்வீரே

என்று பறையன் சொல்லி பின்னையும் அவ்வையாரைத் தெண்டம் பண்ணிச் சொல்லுவான் வாரும் பிள்ளாய் ராகுசிங்கா அந்த பிள்ளை பிறந்தபோது வீரவீரரென்று அழுதபடியினாலே அவன்பேர் வீரமாரனென்ற அவையாரே சொல்ல பறையன் சந்தோஷப்பட்டு நல்லதென்று சொல்லி தானவளவிலே வந்தாள். அதின்பிறகு அவ்வையார் அந்தப்பிள்ளையை சூர்யகாந்தி தொட்டிலின் பேரிலே ஏற்றிக் கொண்டு தாலாட்டினாள். தாலாட்டு விபரம்:-

வீராதிவீரனோ வீரதுரந்தானோ பாருளும் மன்னன்
பணிந்து தொழ வந்தானோ
ஆராரோா றாரோ ஆராறோ பணியர மணென்னோ
பா ராசர் கேசரியோ
அணியாத போகம் ஆளப்பிறந்தானோ ஆளாகும்
லோகமெல்லாம் ஆளவெண்ணே உத்தரிச்சு

நாளான கீற்தி நானுமணியே சொன்னாரோ
ஆராரோ ராரோ ஆரா ராறாரோ
சொன்னமொழி தவராத சுந்திரனை சொன்னாரோ (ஆ)
அன்னமிடவந்த ஆதிபராபரனே

துஷ்டர் குறும்பறுக்க தொல்புவியில் வந்தாளே (ஆ)
சிஷ்டர்த்தொழ வந்த செல்வக் கொலக்கொழுந்தோ
மன்னனுக்குமன்னவனோ வஞ்சிலைக்குமன்மதனோ (ஆ)
கருணைனைபோல் குடைகொடுக்க காசினியில் வந்தானோ

பெத்தபெருமாளோ பிள்ளைகளில் நாயகமமோ
உத்ததருவாயில லுதவும் பெருமரிளா (ஆ)
பெருமாள் திருமகனொப் பெருமாளுப் பெத்தகண்ணோ
அருந்தவங்கள் செயிது வந்த ஆணிக்ககை முற்றொ (ஆ)

செவெறு...சன் திருவடியைத் தான் தொழுது மாவெறி வீதிவரும்
மானகுல வேதியனோ மும்முற்றி பிறம்மா அமைத்தபடி நீயுடன்
பாராள நெறி பரிவுடனே வந்தானோ (ஆ)
மானார் வடிவழகன் வானவர்கள் கொண்டாட
கோனாசிவந்த கொடித்தவப் பயனோ (ஆராரோ)

தவத்தினால் பெரியவனோ சத்தி அரிசந்திரனோ
நவத்தால் பெரியவனோ நவகொடி ராகுவனோ (ஆ)
நவத்தால் புகழ்படைத்த நாற்த்தி சையுங்கீற்திபெத்த
தகப்பன் பழிவாங்க வந்ததற்பானோ பொற்பானே (ஆ)

தற்பரனோ பொற்பரனோ தமிழுக்கதிபதியோ அற்புத
மாய்வந்து நித்தம் அம்மையடி யானோ (ஆ)
அம்மைத் தவத்தால் அரியதவம் பெத்தவனோ
கொம்மை வரிமுறையாற்க கொற்க்கிரிக்குப் பாலகனோ
வேதங்களாக மனூல் விரித்த புகழ்படைத்த பூதம்
பணிசெய்ய புவிதனிலே வந்தானோ ஆராரோ ஆரா

எ-து :- ஆண்டு நிறைந்த பின்பு அந்த லகககுக் கலியாணமும் பண்ணி மங்கல வாழ்த்தும் பாடி பல்லாண்டு கூறி .... சோபணம் பாடி உத்திராயணப் பட்டு மூடுதறி பூணூலும் போட்டு அம்னாறட்டி தா வடமுங்க கட்டி சம்பாணி செங்கிரை முகிந்து மதனை சில முகிந்து

குறுக்கையிட்டு சிறித்து விளையாடி முல்லையறும்பு போலே பல்லுமுளைத்து ரெண்டுவயது சென்ற பின்பு தள்ளி. . . நகையிட்டு மூணுவயது சென்ற பின்பு புத்திர நடையிட்டு தம்பி அசந்து சிறுபறை அசந்து நாலுவயது சென்ற பின்பு நடந்தோடி திரிந்து சிறுதேரு. . . ருட்டித் திரியுற நாளையிலே அஞ்சு வயதாச்சுது அப்போ ராகுசிங்கனான பறையன் பிள்ளைக்கு வித்தியாப்பியாசம் பண்ண வேணுமென்று ஒரு வாத்தியாரை சம்பாதித்து மாசம் படியுங்கொடுத்து தனிபள்ளியாக ஓதிவிக்குற காலத்திலே ஆளும் வயது சென்றது.

அப்போ அந்த பிள்ளைக்கு வண்ணரு, சிந்து, கலித்துரை, வெண்பாவிருத்தம், சந்த, தாழிசை, யின்னிசை, கலிப்பா, திருமுறைவாசகம். . . ஒலா மடல், நிகண்டு, திவாகர, நன்னூல், ஒரு சொல் காரிகை இது முதலாகப்பட்ட காவியங்களெல்லாம் வாத்தியார் போதினை பண்ணினார். அதின் பிறகு ஒரு கெருடக் கூடம் கட்டிவித்து ஒரு பணிக்கவனையும் உண்டு பண்ணி சிலம்பம் கொள்ளச் சொல்லி கட்டளையிட்டான். அந்த படிக்கு பணிக்கனானவன் அந்தப்பிள்ளையாண்டானுக்கு ஆனை ஏற்றம், குதிரையேற்றங்கள் பழக்க வேணுமென்று அந்த அழகாபுரி பட்டணமாளுகிற சூராதி சூரனென்கிற ராசாவினுடைய ஆனை, குதுரை தண்ணீர் குடிக்கிற வழிபாத்து அந்த மாவுட்டிமாரை வாருமய்யா ஒரு ராசாவின் குமார்த்தி என்னை தமையனென்று ஒப்பாரி கொண்டாள்.

அவள் ஒரு பிள்ளை பெத்தாள். அந்த பிள்ளைக்கு ஒரு ஆதரவுமில்லாத படியினாலே அடியேன் பள்ளிக் கூடத்திலே வைத்து படிப்பித்து கெறுடியும் சிலம்பும் வர படிப்பித்தேன். ராசாவினுடைய பிள்ளையான படியினாலே யானையேத்தம், குதிரையேற்றம் பழக வேணுமென்ற கிருபையாயிருக்குது. ஆனபடியினாலே இந்தப் பிள்ளைக்கு நீங்கள் அத்தைப் பழக்கி விட்டீர்களேயானால் உங்களுக்கு கீர்தியுண்டென்று பறையன் சொல்ல அப்போ அந்தமாவிட்டி மாரரிருந்து வாரும் பிள்ளையா ராகு சிங்கா நீ வந்து அபேசாக்ஷயா கேழ்க்கிறவிடத்திலே அட்டி சொல்லுகிறதில்லை அப்படிதானே சொல்லுகிறோ மென்று சொல்லி அந்தபடியே ஆனையேற்றங் குதிரையேற்றம் பழக்கிவிட்டார்கள்.

அப்போ பறையன் சந்தோஷப்பட்டு அவர்களுக்கு வேண்டிய தக்கதெல்லாங்கொடுத்து ஆனைக்கு தேவேந்திரனைப் போலேயும், குதிரைக்கு நகுலனைப் போலேயும் தமிழ்க்கு அகஸ்தியரைப் போலவும் சகலகலை வல்லாழ்மையான தொழிலிக்கு காலனாக பாவித்துயிருக்கிற நாளையிலே அந்தப் பறையன் ராகுசிங்கன் அந்த ராசகுமாரனுக்கு தன்னுடைய தானிய தவசமெல்லாம் வித்து கடுக்கன், பொன் மோதிரம், வெள்ளியானால் முன்கைய தாரி, அஸ்த, கடைய, தாயித்து, சறப்பளி பதக்கம், பீதாம்பரம், அங்கி, சொக்காய், நீசாறு, சரிகை, தலைப்பாகை இப்படிக் கொற்ற ஆபரணங்க ளெல்லாம் தரித்து மன்மதரூபனாயிருந்த வீணை, சாமண்டலம், கின்னரி, முகவீனை, ஆசுமதூர சித்தளகமவயிரவி

சொதாமந்திராக கிருகை... சபாளம மருஷ்ட்டி ராஷ்டிகம் போதி இதுமுதலான முப்பத்துரெண்டு ராகமும் கத்து இருக்கிற நாளையிலே அந்த ராசகுமாரனானவன் தன்னுடைய தாயாரையும் அவ்வையாரையும் தெண்டம் பண்ணி அடியேன் வேட்டைக்கு போக சிலவு தர வேணுமென்று கேட்டபோது

அப்போ அவனுடைய தாயாரிருந்து வாராய் தம்பீ நீயுமோ சிறுபிள்ளையாயிருந்தாலும் கூட வருகிறதற்கு பின்னுதவியாக தம்பி தமையனும் ராணுவும் குதிரையுமில்லை நாம் பறச்சேரியில் வந்து குடியிருக்கிறோம். நமக்கும் வேட்டைக்கும் வெகுதூரமென்று தாயார் சொன்னதுக்கு ராஜகுமாரனிருந்து வாருமம்மாள் பிறுமலமயெ ஒருவளலெது... மொ நீர் என்ன சொன்னாலும் வேட்டைக்குப் போக வேணுமென்று பின்னையுங் கேழ்க்க அப்போ அவையாரிந்த வாளய் தம்பி உன் அம்மான் உத்தரவுயில்லாமல் போக கூடாது. அப்படியெல்லா வென்றும் அவன் வெகுவாய் கோபித்தக் கொள்ளுவான்.

அவனண்டைக்குப் போய் வேட்டையாடி வருகிறனென்று கேட்டால் அவன் போகச் சொன்ன போறதேயல்லாமல் மற்றபடி போறது காரியமல்லவென்று அவையார் சொல்ல ராஜகுமாரன் கேட்டு நல்லதென்று அப்போ ராகுசிங்கனென்கிற பறையனண்டையிலே வந்தான். அப்போ பறையன் கண்டு தெண்டம் பண்ணி என்னை இங்கே எழுந்தருளின விபரம் ஏதென்று கேட்ட உடனே ராஜகுமார்த்திருந்து நான் வந்த காரியம்

ஒன்றுமில்லை என்றார். வேட்டையாடி வரவேணுமென்று வெகுமனசாயிருக்குதென்று சொன்னாள். அப்போ பறையன் சன்தோஷப்பட்டு நல்ல ராசகுமாரன் ஆனபடியினாலே அல்லவோ இந்தக் குணம் இப்படிப்பட்டது. மத்த பேர்களுக்கெல்லாம் பிடிபடுமோவென்று மனதிலே எண்ணிக் கொண்டு, நல்லது மகராசனாய் அப்படித் தானே வேட்டைமார்கம் ஆடிவருவோமென்று பறையன் சொன்னான்.

அதின் பிறகு கச்சை கட்டி நீசாறு தொடுத்து ஒட்டியாணமும் கட்டி சம்பு சமுதாடுகிரிச்சு கத்தியும் கடாரி வேல் முதலான ஆயுதங்களுங் கொடுத்து பச்சை தாபித்து சல்லாவும் ஏகாசம பொட்டு சந்திரகாவி உருமாலையுங் கட்டி சாந்து சவ்வாது புனுகு பரிமள கஸ்தூரி சந்தனம் கொழும்பு மணிந்து சல்லி கட்டின சிங்காணியும் அம்புராத்தோணியும் அணிந்து வில் செருப்பு கொட்டு வல்லியத்து குருவியும் கையில் கொடுத்துனுருபெரு கையச்சம் பளமுங் கொடுத்து ஒரு வெள்ளை குதிரையும் நிழல் பரிகையுங்குடுத்து கிருது வேட்டை நாய்களும் கொடுத்து மகராசனாய் வேட்டை ஆடி ஒரு நாழியில் திரும்பி வாருமென்று அனுப்பினான்.

அந்தப் படிக்குத் தானே ராசகுமாரன் தாயாரை அவையாரையும் தெண்டம் பண்ணி வேட்டைக்குப் புறப்பட்டு தானடகைமலையேறி திருமருப்புத் தடத்துறா அப்புற மலையில் போய் ஆக்கடமை தான ரெண்டாக மாடமுங் கடந்து பாதாள வாசல் கெடியிலேறி தான்

வெளியிலே போயி நிற்கிற போது அப்போது அழகாபுரியிலே இருக்கப்பட்ட குபேரன் குமாரன் சித்திரசேனன் என்கிறவன் சதிரங்க சேனையுடனே கூடி வேட்டைக்குப் புறப்பட்டு தானவ வெளியிலே சென்று சறுவ மிருகங்களையெல்லாம் வதைத்து நிற்கிறபோது அப்போ ஒரு வேங்கை சித்ரசேனன் கிட்ட தளத்திலே போயி விழுந்து அன்பது அறுபது பேரையுங் கொன்று போட்டு அவர்கள் கைக்குளகப்படாமல் வெறிச்சுக் கொண்டு ராசகுமாரன் நிற்கிறவிடத்திலே வந்துது. அப்போ அந்த புலி வருகிற அதட்டியை வீரமாரன் கண்டு சந்தோஷப்பட்டு வலது துடையை தட்டிக் கொண்டு மண்டலி இட்டு இருக்கிற வீரமாரனைக் கண்டு புலி பாய்ந்தது.

அப்போ வீரமாரன் புலி பாய்ச்சலுக்கு ஒதுங்கி வேறானாலே புலியைக் குத்தி கொன்று அதினுடைய தண்டையையும் வெட்டிக் கொண்டு சிற்கிற தறுவாயிலே சித்திரசேனனும் அவனுடைய சேனைகளும் புலி வந்த வழி தப்பித்துக் கொண்டு வரச்சே புலிப் படுப்போய் கிடக்குறத்தை சித்திரசேனன் கண்டு என்னுடைய வேட்டைக்குள் வந்து தப்பி வருகிற புலியைக் கொன்று தண்டையும் வெட்டிக் கொண்டவன் ஆரடா இவன் என்று வீரமாரனைக் கேட்டான்.

அப்போ வீரமாரனிருந்து என் வேட்டைக்குள் வந்த புலியை வெட்டினேன். நீ இந்தக் காட்டியிருக்கப் பட்ட மிருகமெல்லாம் வளத்து விட்டாயோவென்று வீரமாரன்

சொல்லக் கேட்டு வெகுகோபங்கொண்டு சித்திரசேனன் சதிரங்க சேனையும் கூட்டி வீரமாறன் பேரிலே சயித்தியம் பண்ணினான். அப்போது வீரமாரன் அவையாரையும் பறையனையும் பரிபறணத்திலே நினைத்துக் கொண்டு சித்திரசேனனுட தளத்திலே புகுந்து சதிரங்க சேனையெல்லாங் கொன்று சித்திர சேனனையும் பிடித்துக் கட்டிக் கொண்டு வருகிறபோது அந்த வனத்திலே இருக்கப்பட்ட பதஞ்சலி மகாமுனி ஆசிரமத்துக்குக்கிட்ட வருகிறபோது சித்திர சேனனிருந்து ஓகோய் பதஞ்சலி முனி என்று சொல்ல அதற்கு பதஞ்சலி மகாமுனி வீரமாறனையும் சித்திர சேனனையும் கொண்டு வந்து ஆசிரமத்திலே இருக்கச் சொல்லி வீரமாரனைப் பாத்து முனி ஏது சொல்வான்,

"வாராய் தும்பி கிரேதயுகம், த்ரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் இப்படி முன்னூத்து அறுபத்து நாலு யுகம் இந்த வனத்திலே இருந்து தபசு பண்ணுகிறோம். இந்த ராச்சிய்ததிலே வாழ்ந்துண்டிருந்த ராஜாக்கள் நான் அறியாத பேரில்லை. அவர்களது சவுரியமும்யிப்போ உன்னுடைய சவுரியமும் அழகும் எந்த ராகுநாயகருக் கோபமொழிய மற்றபடியல்ல வென்று சந்தோஷப்பட்டு நீயுமோ நல்ல சூரியவங்சிஷமாயிருக்குது நீ யாருட கோத்திரமென்ற பதஞ்சலி மகாமுனி கேழ்க்க வீரமாரனிருந்து வாருமய்யா. என்னுடைய கோத்திரம் கேட்டீரல்லோ நான் சொன்னால் இம்மட்டல்லவோ வென்று தேவர் மனதிலே எண்ணப்படும்".

நான் சொல்லப் போகாதென்று வீரமாரன் சொல்ல பதஞ்சலி மகாமுனி இருந்து "வாராய் தம்பி தன்குலத்தை வழகாமலிருந்தாள் கீற்தி இல்லையென்ற முனி சொல்ல வீரமாறன் இருந்து ஆனால் சொல்லுகிறேன் கேளும்." அழகாபுரி பட்டணத்துக்குப் பறிபோடுகிற ராகு சிங்களென்கிற பறையனுட தங்கை குமாரனானனான் என் பேர் வீரமாறனென்று சொன்னான். அப்போ பதஞ்சலி மகாமுனி இந்த வசனத்தைக் கேட்டுச் சொன்ன வெண்பா:-

தாமரைபொன் முத்துசவரம் கோரோசினையால்
பூமறிவு தெனப்பட்டு புனுகுசவ்வா
தாமழல் மத்தெங்கே பிறந்தாலும் மன்றீரே
நல்லோர்கள்ளெங்கே பிறந்தாலு மென்.

**வசனம் :**

வாராய் வீரமாறாயி எழில் குலமானாலும் நல்லோர்களாயிருக்கப்பட்ட பேர் எங்கே பிறந்தாலும் நன்றாயிருப்பார்கள். நீயுமோ நல்ல பிள்ளை யாயிருக்கிறாய். என்னை வேண்டியாகிலும்யிவனைக் கட்டவிழ்த்து விட்டு விட்டு போவென்று கேட்டார்.

அப்போ வீரமாரனிருந்து தேவரீர் திருவுள்ளத்துக்கு பயந்தென்னெதிய மத்தபடிக்கு இவனை விடத்தக்கன தில்லை ஆக்கினை பண்ணுகிறதெ யல்லாமல் விடக்கூடாது என்று வீரமாறன் சொல்ல முனீஸ்வரரிருந்து வாரும் வீரமாரர் இவ்வனத்திற் வாசம் பண்ணனான் குபேரன் புத்திரன் அவனைக் குறிச்சாகிலும் விட்டு விட வேணும் இவன்பாண்ணினக் குறையேது என்று கேழ்க்க

வீரமாரனிருந்து வாருமய்யா அடியேனும் நூரு பேருமாக பிறப்பட்டு தாடகை மலையேறி வேட்டைக்கு வந்தேன். இவனும் சதிரங்க சேனையும் அங்கே வேட்டைக்கு வந்தானாம். இவனை நாமறியோம். நம்மை இவனறியான். இவனொரு திக்கிலேயிருந்து வேட்டையாடுகிறபோது இவன் வேட்டைக் குள்ளாக ஒருப்புலி அகப்பட்டு அன்பது அறுபது பேரையும் கொண்ணு பொட்டு அடியேன் நிற்கிற நிலையிலே அடியேனையும் சினத்தெடுத்தது. அடியேன் வேலினாலே குத்தி தண்டையும் வெட்டிக் கொண்டேன். இவன் என் புலியைக் கொண்ணு தண்டையும் வெட்டிக் கொள்ளலாமாவென்று அடியேன் பேரில் சதிரங்க சேனையுங் கூட்டி சண்டை பண்ணினான். அப்படி அடியேனும் சண்டை பண்ணி இவனையும் பிடித்துக் கொண்டேன். இவனை இரு கூறாக வீசுகிறதேயல்லாமல் விட்டு விடக் கூடாது என்று வீரமாறன் சொல்ல அந்த தன்மை போல் புத்தி இல்லாதவன் துரகத்தனம் பண்ணுகிறது. வெகுதூரம் இவனை என்னை வேண்டியாகிலும் விட்டு விட வேணுமென்று இருகையினாலே தழுவிக்கொண்டார்.

அப்போ வீரமாரனிருந்து நீர்கேழ்க்கிற விடத்திலே நான் அல்லவென்று சொல்லுகிற தில்லையென்று சித்திர சேனனைக் கட்டவிழ்த்து விட்டு விட்டான். அப்போ முனி இருந்துயினி மேலாகிலும் உறவாயிருந் கோள்ளென்று உறவு கட்டி அனுப்பிவிச்சார்.

அப்போ சித்திரசேனன் தங்களுடைய அழகாபுரிக்கு போனத்தின் பிறகு வீரமாறனிருந்து அடியேனுக்கு புத்தி

போறதென்னாயிருக்குது என்று எனக்கு பிள்ளை என்கிற போரிருந்தால் போதுமென்று இருந்தேன். இவனெனக்கு சத்துருவாய் பிறந்தானென்று சொன்னத்தின் பிறகு அவையார் சொன்ன வசனம்:-

அவன் மனதின்படியே நினைத்த கரு மற்றெ நிறவேற பண்ணிக் கொள்ளு குறத்தை நாம் வேண்டாமென்று தடுக்கிறது காரியமல்லாவென்று அவையார் சொல்லுகிறதறுவாயிலே அந்தப் பட்டணமாளுகிற அழகாபுரியிலே இருக்கப்பட்ட சூராதி சூரனென்கிற ராசாவிருந்து நம்முடைய பாரிகாற ராகுசிங்கனென்கிற பறையனை அழைத்து வரச்சொல்லி ஊழியக்காரனை அனுப்பிவிச்சான். அப்போ அந்த ஊழியக்காரர் வந்து ராசா உன்னை அழைச்சுக் கொண்டு வரச்சொன்னார். வாரும் பிள்ளாய் என்று அழைத்தபோது அப்போ ராகுசிங்கன் திட்டென எழுந்து நடக்க வீரமாறன் முன்னோடி வளைத்துப் போக வேண்டாமென்று ஆணையிட்டு மறித்தான். அப்போ பறையன் நிருந்து என்னுட ஆண்டவர் என்னை அழைச்சு வரச் சொல்லி முத்திரை மனுஷரை அனுப்பி இருக்கிறவிடத்திலே நான் போகாதிருந்தால் எனக்கு ஆக்கினை வருமென்று சொன்னான்.

அப்போ வீரமாரனிருந்து உன்னை ஆக்கினை பண்ணுகிறவன் எப்படிக் கொற்றவன் நான் இளப்பக்காரனாயிருந்தால் உன்னை ஆக்கினை செய்வான். நீ போக வேண்டாம். உன்னை ஆக்கினை பண்ணுகிறது

அறிந்து பார்ப்போம். நீ பருச்சிதம் போகவேண்டாமென்று ஆணையிட்டு மறுத்தான் தான் அப்போ அந்த பறையனை அழைக்க வந்த ஊழியக்காரன்யிருந்து வீரமாரனைப் பாத்து கோபிச்சுக்கொடு நீயோ எங்கள் ராஜாவை இளப்பமான வார்த்தையாய் பேசினதென்னவென்று கேட்டபோது ராகுசிங்கனிருந்து வாருமய்யா சிறுப்பிள்ளை ஒழிய மத்தபடியல்லவே எனக்காக மனம் பொருத்து கொள்ளவேணுமென்று தெண்டன் பண்ணி அவர்கள் கோபத்தை ஆற்றி வாருமய்யாவென்று அழைத்துக் கொண்ட போறபேது திரும்பவும் வீரமாறன் முன்னோடி மறிச்சுக் கொண்டான். என்னென்று ராகு சிங்கன் கேட்டான். நான் தமிழ் சொரி சிந்தாமணி இடத்திலே போய்வாறதுக்கு உத்தாரம் சொல்ல வேணுமென்று வீரமாறன் கேழ்க்க பறையனிருந்து வாராய் தம்பி ராசாவினிடத்திலே போய் வரமட்டும் போக வேண்டாமென்று நிறுத்தி வச்சு போட்டு பறையன் போனான்.

அதின் பிறகு வீரமாறன் மனமடிவா வீட்டிலே வந்திருந்தான். அப்புரம் பறையன் போயி ராசாவை தெண்டன் பண்ணி கயி கட்டி வாய் புதைத்து நின்றான். அப்போ சூராதிசூரனென்கிற ராசா பறையனைப் பார்த்து அடா ராகு சிங்கா நம்முட பட்டணத்துப் பரச்சேரியிலே ஒரு ராசகுமார்த்தி வந்து சேர்ந்து ஒரு புத்திரனும் பெத்துக் கொண்டு இருக்கிறாளென்று ராசா கேட்டவுடனே பறையனை அழைக்க வந்த ஊழியக்காரர் ராசாவைப் பார்த்து வாருமய்யா பறையனை அழைச்சு வரச்சொல்லி

கட்டளை யிட்டீரே அந்தப்படிக்கு அவனைப் போயழைத்தோம் அவனவனவிலே ஒரு குமார்த்தியும் ஒரு ராசகுமாரனும்மிருக்கு நான் அவர்கள் அழகு இந்த பூலோகத்திலுமில்லை. அதெல்லாமல் அந்த ராசகுமாரன் அழகும் சவுந்தரியமும் ஆண்மையும் ஒருவிடத்திலேயு மில்லை. அந்தப் பிள்ளையாண்டான் எங்களைக் கோபிச்சுக் கொண்டு எங்களம்மானெ ஆருடா கூட்டி வரச்சொன்னவனென்று எங்களை அடிக்க வந்தான். அவனைப் பார்த்தால் ரகுநாயகரும் திக்கு சுரூபனாயிருக்கிறான்.

ஆனபடியினாலே அவன் பேரிலே கோவியாமல் வந்தோமென்ற ஊழியக்காரர் சொன்னத்தின் பிறகு ராசாவிருந்து பறையனைப் பார்த்து வாரும் பிள்ளாய் ராகுசிங்கா அந்தப் பெண் உன்வசத்திலே வந்த விபரம் ஏதென்று கேழ்க்க பறையன் சொன்ன வசனம்:- விசை நகரமென்றொரு பட்டணமுண்டு அந்த பட்டணத்துக்கு அதிபதியாகிய வீரதுரந்தர னென்றொரு ராசாவுண்டு. அந்த ராசாவின் வாசலிலே மந்திரியாயிருக்கப்பட்ட தத்துவப் பிறகாசனென்றொரு மந்திரியுண்டு. அந்த மந்திரி கையிலே சீமையும் ஆனை, குதிரை முதலானதெல்லாம் ஒப்பி குடுத்து மந்திரி மொழிதவறாமல் கேட்டுக் கொண்டு ராச்சியபாரம் பண்ணிக் கொண்டு இருக்கிற நாளையிலே ஒருநாள் மந்திரியானவன் ராசாவை வேட்டைக்குப் போவோம் வாருமென்று கூட்டிக் கொண்டு போயி சறப்பினையாக கொன்றுப் போட்டு பட்டணத்திலே வந்து பட்டணத்துக்கு ஆளில்லாதபடியினாலே தான் பட்டமுங் கட்டிக்கொண்டு

இருக்கிற நாளையிலே அந்த ராசாவினுடைய தேவி இருக்கிற வயணம் என்னவென்று ஆள்விட்டு விசாரித்தான். அந்த ஆள் வந்து ராசாவினுடைய தேவி மூணுமாசம் கெற்ப ஸ்த்ரீயாயிருக்கிறாள் என்று சொல்ல வந்தார்கள்.

அப்போ மந்திரி இருந்து இனி அவள் ஆண் பெற்றாளானால் யீனம் வருமென்று அவளைக் கொண்ணுப்போட வேணுமென்று அரமனையிலே வந்தான். இந்த சேதியை ராசாவின் தேவியறிந்து மெள்ள ராவிலே புறப்பட்டு யிருவதிங்காத வழி நடந்து வரச்சே அங்கே சந்திரகிரியென்றொரு பட்டண மிருந்தது. அந்த பட்டணத்திலே போய் ரெண்டு மூணு நாள் விறகு விற்று வயிறு வளத்துக் கொண்டு இருக்கிற நாளையிலே இந்த ராசாவின் தேவியுட அழகு சவுந்தரியத்தைக் கண்டு அந்த பட்டணத்து ராசாவுடனே சொன்னார்கள்.

அப்போ அந்த ராசா இந்த விசேஷங் கேட்டு கூட்டி வரச்சொல்லி ஆள் விட்டானாம். அந்த ஆளுக்கு வருகிறென்னென்று சொல்லி அந்தப் பட்டணமும் விட்டு காடு மலையும் கடந்து வருகிறபோது அங்கே ஒரு கருணையாறு அகோரமாய் பெருகி வந்தது. அந்த ஆத்துக்கு என்ன செய்வோமென்று நிற்கிற தறுவாயிலே ஒருவனை வெட்டி கழுவிலே போட்டு வைத்து அஸ்தியாக உலர்ந்திருந்தது. அத்தை பிடுங்கி தெற்பையாக சேர்த்துக் கொண்டு இக்கரையேறி இந்தப் பட்டணத்திலே வந்து சேர்ந்தாள்.

இந்த பட்டணத்திலே வந்து சேர்ந்தோமல்லாமல் இவனும் தம்மை நம்மை அவமதியாரி பேசுவாரென்று அடியேனிருக்கிற பறச்சேரியிலே வந்து இருந்தாள். அடியேன் கண்டு நீர் ஆருடைய கோத்திரம் என்று கேட்டவுடனே அப்போ அந்த பெண்ணிருந்து நான் இன்னகுலமென்று சொல்லுகிறதற்கு நான் அறியேன். என்னுடைய கணவன் மரித்துப் போனபடியினாலே என்னைக் கண்டபோர் எல்லோரும் கருதினபடியினாலே நான் வெறுத்துக் கொண்டாப் போலே புறப்பட்டு வந்தேன்.

என்னை நீர் மானங்காத்து ரக்ஷித்தீரேயானால் மாதா, பிதுர், குரு, தெய்வம் நீயேயல்லாமல் மைத்த பேரில்லையென்று சொன்னாள். அப்போ அடியேனிருந்து வாராயம்மா நீயுமொரு சூரியவங்கிடி மாயிருக்குது நான் உம்மை இந்த பறச்சேரியிலே வைத்து தாபரித்தால் பாத்த பேருக்கு ஏற்குமோ ஆனால் நம்முட பீடத்துக்கு வந்தாயல்லோ ஆனபடியினாலே மேல் மனுஷாராயிருக்கிற விடத்திலே தானே வீடு வாசல் கட்டிக் கொடுக்கிறேன் என்று சொன்னேன். ராசாவின் தேவியிருந்து மேல்சாதி இருக்கிறவிடத்திலே இருக்கிறதுக்கு உன்னை உத்தரவு கேழ்க்க வேணுமோ நான் அவர்களிடத்திலேயிருந்தால் வெகுமோசம் வரும் என்றல்லோ உன்னிடத்தில் வந்தேன். உன் வார்த்தையும் கீர்த்தியும் புகழுமுண்டாக வேணுமென்றால் யெண்ணியிவ் விடத்திலே எனக்கு ஒரு குச்சுக்கட்டி தந்து ரக்ஷிக்க வேணுமென்று வேண்டிக் கொண்டாள். ஆனபடியினாலே அந்த பெண் பரிதாபத்தைப் பார்த்து அடைக்கலமென்று வந்த பேரைக்

காக்க வேணுமென்று பறச்சேரிக்கு தென்புறமாய் சுத்தி பண்ணி ஒரு குடிசையும் கட்டிக் கொடுத்து கறி காய் இது முதலானதும் கொடுத்து நடத்திக் கொண்டு வருகிற நாளையிலே அந்த பெண்ணுக்கு பத்து மாஸமும் சென்று ஒரு புத்திரனைப் பெத்தாள்.

அந்தப் பிள்ளைக்கு சகலமான வித்தை யாண்மையுங் தொழிலுகளெல்லாம் படிப்பித்து இருக்கிற நாளையிலே ஒரு நாள் வேட்டைக்குப் போக வேணுமென்று கேட்டான். அப்போ அடியேனிருந்து ராசகுலமான படியினாலேயல்லோ கேழ்கிறான் என்று போகச் சொல்லி சொன்னேன். அந்த படிக்கு வேட்டைக்கு போறெனென்று சொன்னான். அந்த வீரமாரனுக்கு ரணுவம் குதிரையும் இல்லை என்று கேட்டான். அப்போ அடியேனிருந்து முன்னூரு பேருக்கு கை சம்பளம் கொடுத்து அனுப்பி வச்சேன்.

அந்தப் படிக்குத்தானே வேட்டையாடி வருகுவானென்று தாடகை மலையேறி நிற்கிற போது ஒரு புலி சித்திரசேனன் வேட்டையில் தப்பி வந்து வீரமாரன் கிட்ட வந்தது. அப்போ வீரமாரன் வேலினாலே குத்தி தண்டையை வெட்டிக் கொண்டு இருந்தான். அந்த புலியினாலே சித்திரசேனனுக்கும் வீரமாரனுக்கும் யுத்தங்கள் வந்தது. சித்திரசேனனை வீரமாறன் பிடித்துக் கட்டிக் கொண்டான். அந்த சேதியை பதஞ்சலி மகாமுனி கேட்க வீரமாறனை வேண்டிக் கொண்டு சித்திரசேனனை மீட்டுவிட்டு வீரமாறனுக்கு வேண்டினவரங்களும் கொடுத்து அனுப்பி விச்சார்.

இப்பவும் தமிழ்சோரி சிந்தாமணியை கண்டு அவள் சொன்ன கவிக்கு மறுகவியும் சொல்லி அவளை விவாகம் பண்ணிக் கொண்டு வருகிறேனென்று மூன்று நாள் ஆறுபொழுது அன்னமும் தண்ணீரும் அருந்தாமல் தாயார் பேச்சுங்கேளாமல் அடியேன் பேச்சு கேளாமல் வாது பேசிக் கொண்டு இருக்கிறானென்று பறையன் சொன்னான். அப்போ சூராதி சூரனென்கிற ராசா இந்த வசனமெல்லாங் கேட்டு சந்தோஷப்பட்டு அப்படிக் கொற்றவல்லாண்மையான பிள்ளை பார்க வேணுமென்று பறச்சேரிக்கும் அப்பால் வந்து இருந்து கொண்டு பறையனை அழைத்து அந்த பிள்ளையாண்டானை அழைத்து வரச்சொன்னார்.

அந்தப்படிக்கு பறையன் போய் வீரமாறனை தெண்டன் பண்ணி வாராய் தம்பீ எங்களாண்டவனாகிய சூராதி சூரனென்கிற ராசாவானவன் வந்திருக்கிறான் உம்மைப் பார்க்க வேணுமென்ற கூட்டி வரச்சொல்லி சொன்னார். வாருமென்று அழைக்க நல்லதென்று வீரமாறன் எழுந்திருந்து நிசாறு தொட்டு சரிகை தலைப்பாகையுங் கட்டிக் கொண்டு சூரியகாந்தி துப்புட்டியும் வல்ல வாட்டாக போட்டுக் கொண்டு வல்லுத்து குருவியும் கையிலே பிடித்துக் கொண்டு தந்த பாதககுரடும் போட்டுக் கொண்டு ஏகாந்த உல்லாசமாக கெறுவிதநடையாக நடந்துவந்து சூராதி சூரனான ராசாவைக் கண்டு தெண்டன் பண்ணினான். அப்போ ராசா கண்டு மெத்த பிரியப்பட்ட நல்ல குணவானான படியினாலேயல்லே இந்த ஆராசமும் குணமும் அழகும்

பிடிப்பட்டுது. மத்தப் பேருக்கெல்லாம் வருகுமோவென்று சந்தோஷப்பட்டு இந்தக் குலமான சாதியை அவம் போகாமல் காத்து ரக்ஷித்தானல்லோ பறையன் அவனக்கு கீர்தியையும் வார்த்தையும் அவனுக்கேயல்லாமல் நமக்கெல்லாம் வருமோவென்று பறையனுக்கு வேண்டிய வெகுமானங் கொடுத்து இந்த காலம் விசாரித்தானென்று பேருங் கொடுத்து போகச் சொல்லி வீரமாறனைப் பார்த்து வாரும் தம்பீ உன்னுடைய தாயாரையுங் கூட்டிக் கொண்டு உங்கள் பட்டணத்திலே போய் சேந்திரும் பிள்ளா என்று சொன்னத்தின் பிறகு வீரமாறனிருந்து வாருமய்யா அந்த தமிழ் சொரி சிந்தாமணியை கெலித்து விவாகமும் பண்ணிக் கொண்டு போறதெல்லாமல் சும்மா போறதில்லை என்று சொன்னான்.

அதின் பிறகு சூராதி சூரனிருந்து வாராய் தம்பி அந்த தமிழ்சொரி சிந்தாமணியை கலியாணம் பண்ண வந்த பேரை தான் சொல்லுகிற உத்தரத்திற்கு உத்திரஞ் சொல்ல மாட்டாத பேரையுங் வித்துவாங்கிஷரையும் ராசாக்களையும் நாலு லக்ஷத்து நாற்பத் தெண்ணாயிரம் பேரை வெட்டி அகிழ்கிடங்கிலே தள்ளிப் போட்டாள். அவள் பார்க்கிற பார்வையிலே எப்பேர்ப்பட்ட மன்னவரும் கெடி விழுந்து ஓடிப்போவார்கள். அப்படிக் கொத்த பொல்லாத ராக்ஷஸி இடத்திலே போக வேண்டாம் என்று ராசா சொன்னத்தின் பிறகு வீரமாரரிருந்து எப்படியாகிலும் கொண்டாலும் அவளையேக் கொள்ள வேணும். செத்தாலும் அவள் கையிலே சாக வேணும் என்று வீரமாறன் சொல்ல ராசாவிருந்து அதுக்கு வேண்டிய காரியமென்னவென்று

என்னவென்று கேட்டான். அப்போ முனீஸ்வரரிருந்து நீ எந்த காரியம் நினைத்தாலும் அந்த காரியம் பலிக்குமென்று மூணு திருநாம மந்திரம் உபதேசம் பண்ணி அனுப்பிவித்தார். அப்போ வீரமாறன் தெண்டன் பண்ணி அனுப்பிவித்து கொண்டு தானிருக்கிற பறச்சேரிக்கு வருகிறது பறையனிருந்து வேட்டைக்குப் போன பிள்ளையாண்டான் வாதாதே போனதென்னவென்று போனவிடத்திலே என்னமோ ஏதோவென்று வெகு துயரப்பட்டு ஓடிவருகிறபோது வீரமாறன் எதிராகத் தானே வந்தான்.

அப்போ வீரமாறனைக் கண்டு தெண்டநிட்டுச் சொல்வன். தேவரீர் யித்தனை தேச காலம் யெனென்று கேழ்க்க வீரமாரன் சொல்லுகிறான். தாடகை மலையிலே வேட்டைக்குப் போன இடத்திலே குபேரன் மகன் சித்திர சேனனுக்கும் எனக்கும் புலிக்காக ரெண்டு பேருங் கூடி யுத்தம் பண்ணினோம். அப்போ சித்திரசேனன் செயிக்க மாட்டாத படியினாலே சித்திரசேனனை பிடித்துக் கட்டிக்கொண்டு வருகிறபோது பதஞ்சலி முனி என்னை வேண்டிக் கொண்டு அவனை விட்டு விடு என்று எனக்கு வேண்டிய வார்த்தைகளும் வரமுங் கொடுத்தார்.

ஆகையினாலே இன்னேரமாச்சுது என்று வீரமாறன் சொல்ல பறையன் வாறாய் தம்பி நல்ல காரியம் பண்ணிக் கொண்டாய். இந்திர பதவியை ஆளப்பட்ட குபேரன் மகனை பிடித்துக் கட்டி யீனமானம் பண்ணி முனீஸ்வரன் கிட்ட போய் வந்தாய். அவன் என்னவாக்கு செய்தாரோ

தெரியாது. உனக்கும் வேட்டைக்கும் எத்தனை தூரம்? இன்னம் என்ன தூதுகளைக் கொண்டு வந்து விடுவாயோ தெரியாது என்று பறையான் சொன்ன வெண்பா:-

தந்தைதனை மந்திரியார் சங்கரித்த அண்ணுமுதல்
விந்தை மனுதேசம் விறகுவித்து
இநத்பறச்சேரி வாசலிலே பாலகனைப் பெத்தாள்
மறைச் செயிருப்பீர் மனம்

**வசனம் :**

வாராய் வீரமாரா உங்கள் தகப்பனாரே மந்திரி கொண்ணுப்போட்டு பட்டமுங் கட்டி ஒப்புக் கொண்டான். ஆனபடியினாலே உங்கள் தாயார் உன்னை மூணுமாசம் கெற்பமாக சூழுந்து கொண்டு அந்த பட்டணத்திலேயும் பிசக்கு வந்து நடந்த படியினாலே இந்த பட்டணத்திலே வந்து சேந்தாள். இங்கே வந்து நீ தமையன் என்று ஒப்பாரிக் கொண்டுனாம் ஆதரித்தோம். அப்படி இருக்கிற விடத்திலே உன்னைப் பெத்தாள். நீயும் வெகுதுடுக்கு புத்தியாயிருக்கிறாய். உங்கள் தாயாருக்கு துணையாயிருக்க வேணுமென்று ஒருவிடங்களிலேயும் இன்று முதற்கொண்டு போக வேண்டாமென்று பறையன் சொல்லக் கேட்டு வீரமாரன் சொன்ன வெண்பா:-

குப்பையிலே போட்டாலும் குண்டுமணி மக்குமோ
வெற்பருகில் நாவிமணம் வீசாதோ
சொற்ப்பெரிய நாட்டுக்கு நாயகமாய் னானேயுவியாளவன்
னிட்டுக்குப் போதுமெனக்கு யிடுபடு மென்னைரக்ஷித்தாய்
அன்றுமுதல் நாடறியப் பேசுமனாடிநீர் தேடரிய

சாம்பவனே தாறணியே யாண்டிருக்கும்
சேதிகள்த் தனையுமாய் செப்பு.

என்று வீரமாரன் சொன்னதின் பிறகு பறையன் சொன்ன வெண்பா:-

செப்பறிய கீர்த்தி செகவீர ராமனென்று
ஒப்பறிய கோசலை யென்கு றாடையோன்
அப்பதியில் மன்னன் பயின்ற பங்கை வாய்த்தமிழால் வென்று
இன்னிய மெல்லாம் வாழ்வாள்ளென்று

வாரும் பிள்ளாய் வீரமார கோசலை நாடென்றொரு பட்டணமுண்டு. அந்த பட்டண மாளப்பட்ட செகவீரனென்றொரு ராசாவுண்டு. அந்த ராசாவுக்கு ஒரு குமார்த்தியுண்டு. அந்த பெண் தமிழுக்கு நானே வல்லவள்ளென்று தமிழிச் சொரி சிந்தாமணியென்று பேரிட்டுக் கொண்டு அவர்களிருக்கிற உப்பரிகை ஆயிரத்தெட்டு அங்கணம் வெத்தியாசாரமும் நவமணி மேடைகளும் குத்தக்க தாயிருக்கும்.

உச்சி தகவுகையும் தோளாயிரத்து தெண்ணூ தொன்பது வாசலும் ஒரு வாசலுக்கு நாலாயிரம் ராசாக்களும் முவ்வாயிரம் புரோகிதரும் அய்யாயிரம் வித்துவான்களும் கத்துசொல்லி ரெண்டாயிரம் பெண்களும் ஊழியகாரி நாலாயிரம் பேரும் தாதிமார் எண்ணாயிரம் பேரும் அஷ்டாங்க மத்தபேரும் குஞ்சு கிளாஞ்சுகளிலே மூணுலக்ஷம் பேரும் செம்புறத்தின் சிங்காதனமுங் வாங்கார பரிசைகளும் சிங்கார பரிசையும் சிங்கார காலாளுகளும் வெண்கவுரி வெத்தி முரசும்

சாம்புராணி தூபமும் கயிலாஷ வீணையும் தும்புறு கின்னரி இப்படிக்கொத்த பல பல சங்கீத வகையாய் மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, செண்பகம், வெட்டிவேர், குருந்தவேர், கொழுந்து, புணுகு, சவ்வாது இப்படிக் கொத்த வாசனை பொருந்தி இருக்கத் தக்கதாயும் நிலைக் கண்ணாடி நவமணி சப்பிறுமாது இப்படிக் கொத்த பலவரிசையாகவும் கூடி இருக்கப்பட்ட பிள்ளைமார் மிருவுமார் வந்து திரையிட இப்படி சகல பாக்கியத்துடனே அனுபவித்துக் கொண்டிருக்கிறாள்.

அந்த தமிழ், சொரி சிந்தாமணியை விவாகம் பண்ண வந்த ராசாக்களும் வித்துவாங்கிடிரும் பளபய அதமபேருண்டு. அவள் சொன்ன கவிக்கு மரு உத்திரம் சொல்ல மாட்டாத படியினாலே அவர்களை வெட்டி அகிழ் கிடங்குலே தள்ளி போட்டாள். ஆகையினாலே அந்த ராசகுமார்த்தியைக் கேழ்க்க பயந்திருக்கிறார்கள். நீயும் அவளை விவாகம் பண்ணுரென்னென்று சொல்லுகிறாய். இந்த வார்த்தை எங்களுடனே சொன்னாப் போலே மத்த பேருடனே சொல்லி உயிரிழந்து போக தேவையில்லை என்று பறையன் சொல்லக் கேட்டு வீரமாரன் சொன்ன விருத்தம்:-

அன்னவன் மொழியே கேட்டு அரசர் கோனேது சொல்வான்
மன்னவன் கோசலை வாழும் வனிதையை மணம் புணர்ந்து
பின்னை யுதனையுங் கூடி பிறகு நின செதிநோக்கி
என்னுட தேசந்தன்னில் ஏகுவேன்னெ உரைத்தான்

*எ.து:- ராசகுமாரன் சொன்ன விருத்தங் கேட்டு பறையன் சொன்ன கலித்துரை:-*

காடா பரவியத்தாலே பாசம் கட்டின மதாயதுஷ்ட்டன்
காலன்குணம் படைத்தர் அவள் தோகையரை கிட்டாதுகாணும்
இதுவே உமக்கு கெடுமதியோ எட்டா பழத்துக்கு
விட்டாத்து நிறப்பதும் மெளுதமெ

*பறையன் சொன்னதின் பிறகு ராசகுமாரன் சொன்ன விருத்தம்:-*

கங்கை சூழுலகுக்கெல்லா காற்க்கவே காவலாகி
சங்கையுந் திருமால் புக்குந் இதன்மொழிந்த சித்தமங்கையை
தழித்து மணம் புணந்தனுதெனாகில்
எங்கரக்கஙெவிலாம் மிமுகனாகுவேனே

*என்று ராசகுமாரன் சொன்னதின் பிறகு பறையன் சொன்ன விருத்தம்:-*

வரகு உன்தேசம் விட்டு மனுநகரந்தன்னில் புக்கில்
ஆகியுன்தாஹமன்னே பினத்திட யென்று வந்து
மேவியே இருட்டில் தங்கி இவனுமையாய் உனையுமின்னாள்
பாவிநீ... கப்பாறாய் எனப்பு கழ்பறையன் சொன்னான்.

*பறையன் சொன்னதின் பிறகு ராசகுமாரன் சொன்ன விருத்தம்:-*

பிறிதி யொன்றில்லாக் கூறும் பொய்வளை தனது முன்பாய்
அறதியாயக் கூறியானும் அவளை வெண்ணணுகேனாகில்
உறுதியொன்றில்லாசீவன் ஒழுங்கென மறைந்தானாகில்
சுருதியிலான வீரசூர கொனமனுலலென

என்று ராசகுமாரன் சொன்னதின் பிறகு பறையன் சொன்ன விருத்தம்.

அலைத்திரன் கன்றிரொடே அடியினை வணங்கிப்போலே
கலைபலமிகுந்து வந்து காரிகை கறத்து வாளால்
கொலைப்படும் அரசர் மெற்ற வாவென்று கூற
தலையிலெழுத்தை யார்தப்ப போகாதென்றான்.

பின்னும் பறையன் சொல்லுகிற விருத்தம்:-

தன்னுடன் பிறவா தம்பிதனைப் பிறதாய தந்தை
அன்னியரிடத்தில் செல்வம் மானினம் தாசிவேசி
புண்ணிய ரெட்டின் கல்வி மறுவினையாழ வாழ்க்காப்
பன்றி வைக்கும் மெட்டும இடுக்கதை குதவாதென்றான்

என்று பறையன் சொன்ன வசனம் எல்லாங் கேட்டு வீரமாறன் தாயார் ஓடிவந்து தமையனாகிய பறையனை நோக்கி வாராய் அண்ணே உனக்குமிவனுக்கு வாக்குவாதங்கள் வந்த விபரம் ஏதென்று ராசாவின் தேவி கேழ்க்க அப்போ பறையனிருந்து வாராய்யெனதாயே கோசல நாடென்கிற பட்டணத்திலே செகவீரமார ராசாவினுடைய குமார்த்தி தமிழ் சொரி சிந்தாமணினென்றொரு பெண்ணுண்டு. அவளுக்கு ஆசும தூரம சித்திர விஸ்தாரம் கலித்துரை கவித்துவம் பிறமொழி பிற உத்தாரகம் உதவிச்சொல் இப்படிக் கொற்ற லக்ஷண வகைகளெல்லாம் பாடின மகத்தானவளாயிருக்கும். அவள் சொல்லுகிற கவிகளுக்கு பிறதி உத்தரஞ் சொல்ல மாட்டாமல் இருக்கிற வித்வான்களுக்கு ராசாக்களையும் வாருமென்று துளசயஅத பேரை வெட்டி அகிழ்

கிடங்குலே தள்ளி போட்டாள் அவளுடைய சுரூபம் எப்படி இருக்குமென்றால் தாடகையும் சூற்பனகை போலே சொடிந்து முஸ்திபாகதானே இருப்பாள். அவள் பார்க்கிற பார்வையிலே எப்படிப்பட்ட மன்னவரும் இடி விழுந்து ஓடிப்போவார்கள்.

அப்படிக் கொத்த சூர பிடாரியை இவன பறச்சிவளவிலே பிறந்த பிள்ளை அந்தராச குமார்த்தி சொன்ன பிறதிறாகவியுஞ் சொல்லி வரவேணும். அவளையும் விவாகம் பண்ணிக் கொண்டு வருகிறோமென்று என்னுடனேச் சொல்லி வருகிறான். நான் பாடுபட்டு இவன் பிழைத்தால் உனக்கு உதவியாயிருப்பானென்று எண்ணியிருந்தேன். இவன் அந்த ராசகுமார்த்தியான தமிழ் சொரி சிந்தாமணியானவள் கைவாளுக்கு இறையாகப் போறவழியாக இருக்குது என வார்த்தை தான் கேளாமல்ப் போனாலும் புத்திகளுரைக்க வேணுமென்று பறையன் சொன்னத்தின் பிறகு ராசாவின் தேவி தன்னுடைய குமாரனைப் பார்த்து சொன்ன விருத்தம்:-

என்னுடை மகனே கேளாய் இலகிய வார்த்தை தன்னை
பொன்னின் னாடாகிறத்தி புண்ணியவாசரேநீ
பன்னிசை அரியும் வெறப்பை பரையர் தம்மனையி
லின்றென் - உன்னின் வறியதாக மொழந்தது
தவிழ்க்கையென்றான்.

என்று ராசாவின் தேவி சொன்னதின் பிறகு வீரமாறன் சொல்லுகிற விருத்தம்:-

அன்னையே வருந்த வேண்டாம் அவனியில் திகமான
மின்னியர் சென்றுயானும் விரித்திடும் கவிதை வென்று
அவள்தனை விவாகம் பன்றி அணிந்திர மன்னர் போற்ற
உன்னிடபாதம் போற்றி நம்மூர தனக்கேகு வேனே

என்றும் வீரமாரன் சொன்ன விருத்தம்:-

## தாயார் விருத்தம் :

கொள்ளிநீர் கடனும் தந்து குலாவியே இருப்பாயண்ணே
தள்ளிவிட்டகன்று போனால் தாரணிக்கேற்கு மோதான்
தெள்ளியே மணியே என்று திகைத்தவள் அலறிச் சொல்
எள்ளிய வீரமாரன் உரைத்தனன் விருத்தத்தானே

கொள்ளிநீர் கடனுந் செய்வோன் குவலய மதிக்கவேதான
தெள்ளிய தமிழ்குவல்ல சிந்தாமணியையுங் கொள்வேன்யான்
உள்ளதே முடியுமல்லால் ஒருவர்தன் பேச்சுங்கேளேன்
மெள்ளவே பதியில் அம்மா வீறுடன் போம்போம்மென்றாள்

இப்படி வீரமாரன் சொன்ன விருத்தம் அவனுடைய தாயார் கேட்டு இனியேது பிள்ளையை இழந்தோமென்று மெத்த விதனமுத்து நிற்கிற சேதியை அவையார் கேட்டு ஓடிவந்து ராசாவின் தேவியை மனந்தேத்தி வாராய் பெண்ணே முட்டையிலிருக்கிற குஞ்சு இறகு முற்றி பறக்குற பக்குவமானால் மாதா பிதா வசனம் கேழ்க்குமோ நீ என விதனப்படத் தேவை இல்லை என்று அவையார் சொல்ல ராசாவின் தேவி சொன்ன வசனம்.:-

வாரும் அவையாரே இந்தப் பிள்ளைப் பிறப்பட்ட பாடு சிவனறுவான் அத்தெல்லாமற்றபே அறியப்

காலவழி வெண்பா :

இடைக்கால் வழியாக என்றுவந்தீ ரென்றாள்
குடையறாடப் பரியகுபேரா வருவாய் கேள்
அன்னை பின்னைவெ யென்னை அவனிமெச்சவே பிறந்து
உன்னிடத் தேவந்தேன் உகந்து

**வசனம் :**

இப்படி ராசகுமாரன் சொல்ல அதுக்குத் தமிழ் சிந்தாமணி சொல்லுகிறாள்.

**விருத்தம் :**

காசினியோர் தனைமறுத்தும் பொருளே வாங்கும்
கசைகட்டும் மகளரீ கூட்டும்
ஆசையினால் எனவொரு மகிழ்ந்து கேழ்க்க
ஆஸ்தான பலவித மாரட்டங் கொள்ளும்
தூசுகலையிடு வளைகள் அணிந்துக் கொள்ளும்
துடியிடைப் பெண் தொலாட்டி தொந்த காரி
வேசியெனும் தாசியெனும் மல்லாமாலே கேளாய்
வீரமாறா யிக்கதையை விளம்பு வாயே.

ராசா **விருத்தம் :**

அன்னநடை மான்விழியீ ரொன்று கேளும்
அதிசயமாம் விஞ்சையற கொன் றருளேயாகும்
கன்னல்மொழி மதுரகவீசிந்து வண்ணம் கழிநெட்டில்

வெண்பா :

விருதம் கலந்து கூறும் பந்த மிழாகமு மேவனுதையளே
பங்கயத் துள்ளுறை மாதே பழமேயாக
உன்னினவே யறியாமல் ஏதோ சொன்னாய்
உடுக்கெனவும் துடியெனவும் முரைக்கலாமா

சிந்தாமணி :

படையள்தனை சென்றணிந்து யுருவந்துளைக்கும் நேறாய்
பந்தலரை அறுக்க வென்னப்படையுங் கூட்டும்
குடையும் விடும் விடும்பெரிய குதிரையேறும்
கோட்டை கொள்ளும் கொக்கரிக்கும் கொள்ளைவாடும்
ஆடலுருவே வேலெறிந்த பகையே நிற்கும்
அரசழியும் வீயாழி அரசே யல்லவா
விடை மிகுந்த சிவனருளா லுலகை யாளும்
வீரமாறாயிக் கதையை விளம்பு வாயே

வீரமாரன் :

சேந்திருக்கும் பூச்சூடி கனலு மேந்தி
திருக்கியைலே மானுமொரு மழுவும் மேந்தி
விந்தை யிடப்பக்கம் தன்னில் வைக்கும்
விமலரிடத்திரு மகனார் விபரத்தோடும்
கந்தருக்கு முற்பிறந்த விபரத்தோடும்
கடக்கரித்தும் விகடதடககருத்தை கூட்டும்
தந்திமுகம் ஏறும் பெருச்சாளியாகும்
தாரணிபால் குலங்களெல்லாம் சாத்தலாமே

சிந்தாமணி :

வீரமுடன்போர் பொருவால் சேயல்லா
விடையது சென்று கந்தெறும் சிவனமல்லா
பாருலகில் நல்லோருக்கு தவியாவார்
பண்பானபூ முடிப்பாள் பரத்தையல்லா
தாரணிக்குள் வருவதும் போவதுவும் சொல்லும்
சகலகலை நிறமுடையோர் மறையோரெல்லாம்
ஏருலகில்விசைந்தாம் தன்னில் வாழும்
வீரமாறா இக்கதையை விளம்புவாயே

ராசா :

கருதலாகள் அடையோம் அசுரர்மாள
  கடசரிகள்வரு துரங்க காசேர்மாள
பரிதிமதி தொற்கும் வையயதவ கையமிரி
  பங்கையத்தோன் பெருவெள்ளம் கரிகள்வீழ
மருவல ரச்சப் பகுடவமுதம் குபானாமலர் தமக்கு
  முருகனெனும்வள்ளி பங்கன சிக்குவலார்கள்
குலதிரன் சிமிடைமிட்ட செந்திவடி வேலருடன் சே... வலாமே

சிந்தாமணி :

தும்பியுண்ணா பூமலரும் காயுமுண்டு சோருமுண்ணார்
  பசியர் மல வயனுமுண்டு
வெம்பியதோர் பழம் பழுக்கும் எடுப்பா ரதிவுணார்
  வீடுமுண்டு கம்பதனால் மெய்ந்த தெல்லாம்
நம்பினவர் வகுர நம்பமாட்டார்
  நல்ல நல்ல நிறையமுடையோர் நளினகாறற்
வெம்பு செரி நிறம் புயனெ அரசரேநீர்
  வீரமாறா இக்கதையே விளம்புவாயே

வீரமாரன் :

பண்ணுமொரு மச்சைய கெந்தி முனியேகூட
  பரிமளகெந்தயானாள் பாரில் மீது
தன்னிய காங்கய னுரைக்க அனுதங்கூட்டி
  சந்தன மாறாயனுக்கு பாரியான்
இன்னிலத்தோர் தானறிய குந்தாதேவி
  இன்றுவரும் கலந்தாரி மக்களான
சொன்னதிரி யோதரனும் தன்மர்தானும்
  சூதாடி தோத்தவும் சொக்கட்டானே

சிந்தாமணி :

சித்தாடை எடுத்துடுக்கும் சிறுவனல்லா
சிறக்க நூலணிந்திருக்கும் திருமாலல்லா
உத்தஉடல் கெண்ணையிடும் பணிக்கனல்லா
ஒகைழுத்து மணியுடையா ரெதுமல்லாச்
செற்றவர்தம் புரமெரித்தார் முன்னே நிற்பார்
சிறந்தபணி விடைசுகுதவும் நதியல்லா
பொற்பாதம் பூண்டிருக்கும் திருமாலல்லா
பூமியனெ இக்கதையை மகன்றிடாயே

வீரமாறன் :

மந்தனா பிச்சிமுல்லை மகில்மருகு பிளைகோன்ற
தும்ப மலருஞ் சூட
இந்தார நஞ்சூர மெந்துமிக்கும் திருகோவில்
முன்னே நிற்கும்
கொந்தாரும் குழலண்கே வனிதைமாதே
கொடியுடையும் தனவிலை கேவைச் செவ்வாய்
செந்தாமரைத் திருமுலமயிலே மாரித் திருக்கொடிக்
கம்பமென செப்பலாமே

சிந்தாமணி :

நாறுதலை ஒன்றுமுகம் நமனுல்லா
நானிலத்தில் அறியாத தேசமில்லை
காலுமுண்டு காசினியில் நடக்க மாட்டார்
கருத்துடனே பாவையர்கள் தானுமல்லா
சீலமுடன் மைந்தனாயும் பெறுவார்
சிநேகிதர் வந்தெடுத்தால்ச் சேரவொட்டார்
ஆலமுண்ட திருவானைப் போத்தும்
அரசனே இக்கதையை அறிவிப்பாயே

வீரமாறன் :

தேங்கு பிலாஇலுப்பை பின்னை திருககந்தேக்கு
செருவுகுளம் வருகை இங்கனதுழுவனசால்
தாங்குகிரி கோபுரங்கள் சுற்றுமேளம்
சாளங்குந் திருக்கோயில் பண்டகசாலை
ஆங்குலணி பணிபாரினது ளொமென தொப்புக்
காவினம கண்டதெதுவாழும் மாங்கனிக்குத்
தூங்கும் தலைகீழாய் நிற்கும் வவ்வாலின்ரவர்
பெறா வருக்கலாமே

சிந்தாமணி :

பொன்னும் வெள்ளியும் பூண்டே மினுக்குவள்
பொதவே எண்ணை வாத்து முழுகுவள்
வன்னமான் வகைப்பூ முடிப்பவள்
வழிநடைக்கு நல்லலங் காரியள்
சொன்னகாசு பணமும் பறிப்பவள்
சொல்லவென்றால் வேசியுமல்லவே
மன்னனே இந்தவன் கதைதன்னையே
வகுத்துரைத்து நீவாய்மொழி கூறயென்றாள்

ராசகுமாரன் :

அடவி தனிலேதிரிந்து கனிகள் தின்னும்
அதுநலதுயென்று சொல்லி சிவனுக்கேத்தும்
மடவரையின் மானிரச்சி திண்ணும் பாத்து
மதினதலாளுமை பாகரசென்று சாத்தும்
விடைமிகுந்த சிவனாரும் கொழுந்து கண்ணீர்
மிக்க சொரிந்து வருகையில் வேடன்கண்டு
திடமுடனேத் தன்கண்ணேப் பிடுங்கி கொடுத்துமத்
திருவேடன்ச செருப்பன்வே செப்பலாமே

**சிந்தாமணி :**

காலிலிடுக்கும் கையிருக்கும் நீருபூசும்
கட்டாமல் கட்டுவிட்டால் கலக்கமாகும்
மேலவர்க்கும் முறவாக மடியில் தூங்கும்
மேனிகுளித்தொரு வேளை வெண்மை காட்டும்
மாலருக்கும் பரிகாரர் கூடமாகும்
மகுப்பட்டால் அரசர் சொன்ன வரிசைவாங்கும்
செலக்குதிக்கும் விசைநகரம் தன்னில் வாழும்
செயவீர மாரரே செப்புவாயே

**ராசகுமாரன் :**

சத்த சமுத்திரஞ் சூழும் லோகந்தன்னில்
தாரணியிலுண்டான சனங்களெல்லாம்
சத்திசிவன் விடைமிகுத்தார் தமக்குமாகும்
சாஸ்திரத்தி லந்தணர்கள் தமக்குமாகும்
கொத்துமுடி அயன்மாலுக்கும் மிந்திரர்க்கும்
குவலயத்திலலிருப் போர்க்கும் குழலிமார்க்கும்
இத்தனைபேர் தனக்கதவும் மானேகேளும்
இவர்பேரைய க்கிலையென்றியம்பு வாயே

**சிந்தாமணி :**

நன்றாக முளைத்தெழுவார் நிலத்திலேழு
நாறாமல்பூப் பூப்பார் காயுங்காயார்
திண்ணாலும் சுகமுடையோர் தித்திப்பில்லை
தெய்வத்தைக் கண்டாலும் மின்னே நிற்கும்
அன்னாடிரப போறக்களத்தில் வாளுமாவார்
அங்கையென்று மங்கையற்கு குருவாளாவார்
விண்ணாளும் மன்னவனே வீரமாரா
வித்மாக இக்கதையை விளம்புவாயே

*ராசா :*

ஆயெனுங் குழவிமாதே . . . . . இக்கதையை விளம்புவாயே.

*ராசா :*

ஆயெனுங் குழவிமாதே ஆயிழையானே கேளாய்
சொல்லியக் கதைக்கு பயனை துரந்தரன் சொல்வேன்யானே
வில்லெனு மங்களானந்த மெல்லியார் தன்னைபாத்து
சில்லெனக் கிள்ளுவாய்க்கும் திருதிகமதுவுமாமே

**சிந்தாமணி :**

பச்சைமேனியேத் தோலால் மினுக்குவள் பாரமான
முலைமீதில் மூடுவள்
இச்சை சொல்லியிதஞ் சொல்லுவார் களுக்கின்பமான
யினி நயம் பேசுவள்
லெச்சை யானவள் கண்டு எழுந்திடில் இன்பமாய் நயம்
இச்சை யறிகிலார்
கச்சை கட்டி யதாசியரல்லவே கள்ளனே சொல்லுங்
கதை வீரமாரனே

*ராசா :*

அன்பாக ராகங்கள் அறிந்தோர் கையில்
அதியசமாய்த் தானிருந்து
அன்பே சொல்லும் பெண்போலே குழல்முடிந்து ராகம்
பாடும் பூவைப் பாரதானிருந்து புகழ் சொல்லும்
இன்பமாகக் கேட்டிருந்து பொருள்ச் சொல்வோற்க்கு
மிதமாகத் தானிருந்து யிசையை சொல்லும்
என்பாலே இருக்குமிட மானேகேளும் இவர்பேரே
தம்புரு வெனறியம்பு வாறே

*சிந்தாமணி :*

பச்சையாய் வெள்ளை யாவார் பலபல விதங்களாவார்
இச்சியாதொரு வரில்லை என்றியே அறிந்துகட்டி
பிச்சியராமதுவையுண்டு பேச்சுரை தாகம்தீரும்
கச்சிவாழ் வீரமார்பா கதைதனை சொல்லுவாயே.

*ராசா :*

முத்தியுடன் மோக்ஷத்தைப் பொறுளைக் கொள்ளும்
மூவுலகிலறிவோர்கள் அறிவை கொள்ளும்
வெத்தியுடன் வேதமெல்லாம் மிகவேகொள்ளும்
வேழ்வியுள்ள சாஸ்திரங்கள் ஆறுங்கொள்ளும்
பத்தியுடன் பரமநின்பேர் பயனைக் கொள்ளும்
பாவலர்கள் அருகிருந்து படிப்பே சொல்லும்
சத்தியமே பணவோலை முன்னே நிற்கும்
தாரணியில்லவர் குலங்கள் சாற்றலா மே.

*சிந்தாமணி :*

தங்கள்தங்கள் குலம்நுணுக்கத் தாவமென்றாள்
தன்னுடையபேர் போட்டு மறுபேரிட்டு
பங்கமைத்துலச்சை கேட்டு பனையம் வாங்கி
பலபேரும் தான்வாழ்கப் பணிய செய்து
அங்குமிங்கும் தானிருந்து சலத்துக்காக
அவளுமொரு மார்மீதில்க் கட்டிப் பூந்தாள்
தொங்கல்குழல் முடிமடவார் தானுமல்லா
துயரந்தானே இக்கதையை சொல்லுவாயே.

*ராசா :*

முளைக்கயிலே செவந்திருக்கும் மெளுந்துசாயுந்
முகிலெடுத்த மழைதனக்கும் முந்தீ தோணும்

கேழ்க்க அதுக்கு வீரமாறனிருந்து ஒரு குதிரை மடமும் அஞ்சுமும் ஒரு ஆளும் முண்டானால் அவளை வெண்ணு வருவேனென்று வீரமாறன் சொல்ல ராசாவிருந்து ஒருவருடைய போகங்கள் ஒருவராலே அறியப் போகாதல்லவா. நல்லதென்று ஒரு பெரிய தெசிகுதிரையும் அஞ்சு பொன்னும் கொடுத்து அடப்பக்காற பய்யனையும் கட்டளை பண்ணி அனுப்பிவிச்சான்.

அதின்பிறகு வீரமாறன் பிறப்பட்டு பறச்சேரியில் வந்து தன்னுடைய தாயார் பாதத்திலேயும் அவையார் பாதத்திலேயும் விழுந்து கை கட்டிக் கொண்டு நீங்கள் வாக்கு சொல்ல வேணுமென்று கேழ்க்க அப்போதாயும் அவையாருமிருந்து அந்த தமிழ் சொரி சிந்தாமணி கவியும் வெண்ணு அவளை விவாகமும் பண்ணிக் கொண்டு எதுத்த ராசாக்களையும் வெண்ணு வாருமென்று வாக்குச் சொல்லி திருநீருமிட்டு அனுப்பினான். அந்தப் படிதானே பறையன் கையிலே அனுப்பிவிச்சுக் கொண்டு வீரமாறன் புறப்பட்டு காதத்துக்கு கதவழிக்கு மப்பாலே போறபோது ஒரு பஞ்சவர்ண அலவிருக்ஷம் இருந்தது.

அந்த ஆல விருக்ஷத்துக்கு கீழே ஒரு சுனை இருக்குது. அந்த சுனையிலே தினமொரு செங்கழுநீர் பூ பூத்து வரும். அந்தப் பூ எடுத்துக் கொண்டு ஒரு வைஷ்ணவன் தலைகீழாக நின்று கொண்டே தபசு பண்ணிக் கொண்டு நின்றான். அவரிடத்திலே வீரமாறனிருந்து அந்த வைஷ்ணவனைக் கண்டு தெண்டநிட்டு தேவரீர் இந்த தபசு பண்ணுகிறதுயேதென்று கேட்டான்.

அந்த பிராம்மணன் சொன்னது முன்னாலே மகாவிஷ்ணு திருவயோத்தியிலே அவதரித்த பிறகு சீதையும் லக்ஷ்மணரும் தாமுமாகக் காட்டிலே திரிந்து இங்காபுரிக்குப் போய் ராவணனை சம்கரித்து சீதையை சிறைமீட்டுக் கொண்டு திரும்பி திருவயோத்திக்கு வந்து ராஜ்ய பாரம் பண்ணி வைகுண்டத்துக்கு எழுந்தருளினார். அப்படிக் கொத்த ஸ்வாமி இன்னமொருதிரம் வந்து ராசாதிபத்யம் பண்ண வேணுமென்று நோக்கி தபசு பண்ணுகிறேனேன்று சொன்னான். அதுகேட்டு ராசகுமாரன் சந்தோஷப்பட்டு நான் ஒரு கார்யமாக நினைத்து புறப்பட்டு வந்தேன். அந்த கர்மத்தை நிறைவேத்த வேணும் என்று ராசகுமாரன் கேட்டான்.

அப்போ அந்த பிராம்மணன் நீ நினைத்த காரியம் கைகூடுமென்று ஒரு செங்கழுநீர் பூ கொடுத்து ஒரு கவச குண்டலமுங் கொடுத்து அனுப்பினார். அந்த பிராம்மணன் கையிலே அனுப்பி வைத்துக் கொண்டு தமிழ் சொரி சிந்தாமணி இருக்கிற பட்டணத்துக்கு அப்பாலே பாரி படுகிளமா காத்திருப்பார். அவன் நிற்கிற விடத்திலே ராசகுமாரன் சென்றான். அந்த படுகளம் காற்பான் போகாதே என்று ராசகுமாரனை மறித்தான். அவன் மறிப்புக்கு நில்லாமல் நடந்தான். அது கண்டு படுகளம் காற்கிற கண்டோதரனும் அதிக கோபமாகி இவனுக்குயித் தன்மையான ஆழமையெதென்று சதிரங்க சேனையோடுங் கூடி சூலாயுதமெடுத்து எறிந்து சண்டை கொடுத்தான். அப்போது வீரமாரனென்கிற ராசகுமாரன் பத்திர

காளியைக் கருத்திலே நினைந்துக் கொண்டு யெதுத்து உயித்தியத்துப் போனான். அப்படியே இரண்டு பேரும் யுத்தம் பண்ணுகிறபோது துட்டோதரனையும் சதிரங்க சேனையும் கொண்ணு சூலாயுதமும் பறித்துக் கொண்டான். இந்த விசேஷம் கமிலாசனன் கேட்டு அதிக கோபத்துடனே சகடையேறிக் கொண்டு புறப்பட்டு வீரமாரனை போய் மறித்து உயித்தியம் பண்ணினான். அப்போ வீரமாரன் சிறந்து அந்த கமலாசனனுடைய சகடையும் முறித்தொடித்து யுத்தம் பண்ணினான்.

அப்போ அவர்களையும் கொண்ணுப் போட்டு அவனுடைய சூலாயுதத்தையும் பறித்துக் கொண்டு கோசலை நாடென்கிற பட்டணத்தினுடைய தெற்கு வாசலில் வந்து அந்த வாசல்காரனாயுங் காணாமல் புறப்பட்டு அந்த வாசலுங் கடந்து மறுவாசலும் தாண்டி எட்டுத் தெருவீதியும் குதிரையேறித் துரத்தி அரசன் தழை முறித்துக் கொண்டு வந்து வரிசையாய் தோரணமுங்கட்டி ஆசார திண்ணையின் பேரிலே ரத்தின கம்பளியும் விரித்து சர்வலோக கத்தானான கும்பகர்ணன் அழகேசன் போல கொலுவிருக்கிற வேளையிலே முதல் வாசல் ரெண்டாம் வாசல் பிள்ளைமாற் பீரும கொல்லர் பாடிகள் இவர்கள் முதலான பேரெல்லாம் கூடி வீரமாரனண்டையிலே வந்து நீர் எந்த பட்டணத்து ராசகுமாரன் நீர் தமிழ் சொரி சிந்தாமணி உத்தரவு இல்லாமல் கோட்டைக்குள்ளே வந்து ரெண்டாங் கட்டு கடந்து எட்டு திக்குகளும் விருதுகட்டி குதிரையேரி சிகாரியிட வந்ததேதென்று அரமணை

வாசலிலே சிகர தோரணமுங்கட்டி ஆசார சாவடியிலேயிருக்க வந்த தென்னாவென்று கேட்டார்கள். அப்போ வீரமாறன் சொன்ன விருத்தம்:-

பங்கய முகத்தினாளை பரிமளம் சிறந்ததேனை
இங்கிதமாக சேர்ந்து இனிதுயரெல்லாந் தானும்
துங்க வருதலிநாளை தெருவையை மணமே செய்து
அங்கவளுரைக்க வத்தை கவியெல்லாம் மொழிகுவேனே

என்று வீரமாறன் சொன்ன வசனம் கேட்டு பிள்ளைமார் பிருவு இப்படிக் கொத்த வல்லாண்மைக்காரர் இன்னாள் வரைக்கும் நாம் கினாவிலேயுங் கண்டதில்லை. இனிநாம் இவனை மறித்தாலும் நம்முடைய மறிப்புலே நிற்கிறவனல்ல வென்றுக் கூடிக் கூடிப் பேசிக் கொண்டு நிற்கிற தருவாயிலே வீரமாறன் இனி நான் இங்கேதானே இருந்தால் தமிழ் சொரி சிந்தாமணி அறியப் போருளோ நாம் அவளண்டையிலேப் போக வேணுமென்று மூணாம் மூற்க்க நாலாம் வாசல் நலம் பிற கடந்து அஞ்சாம் வாசல் அறிவுடன் கடந்து ஆறாம் வாசல் மண்டபம் கடந்து ஏழாம் வாசல் லக்ஷ்மி மண்டபம் கடந்து எட்டாம் வாசல் இலக்கிய கோபுரம் கடந்து ஒன்பதாம் வாசல் ஓங்குமணி மண்டபங் கடந்து பத்தாம் வாசல் வந்தபோது அங்கே இருக்கப்பட்ட மடகுவற்ததனரும் வாசல் பெரியோரும் அவசரக்காரரும் அக்கினிப் பிரதாபரும் அதிவிதமாகிய அமைச்சரும் அரசர் மக்களும் பஞ்சாங்க புரோகிதரும் பழமுறைக்காரரும் சதிரங்க வேதியரும் தமிழ்சொரி வானவரும் உளத்துரைக்காரரும் வல்லாண்மையான முத்திரை மனுஷரும் படத்தலைப் பரச்சாரரும் திருமேனிக் காவல்

செய்கிற பிள்ளைமார்களும் கொத்தளக்காரரும் சந்திர செக்குரரும் மஞ்சனசாலை வரிசை வரிசைகாறனும் உத்திர தேசத்தில் உத்திர ராசாக்களும் சுததாங்ககாரரும் பெரம்படிக் காரரும் இவர்கள் முதலான சமஸ்தான பேரும் கூடி வீரமாறனைக் கொல்லர், குடகர், வடுகர், துளுவர், மராஷ்ட்டர், ஆரியர், கெவுதர், சொனகர், சிங்களர், கிங்கிலியர், துஷ்டர், பரசாரரும் இவர்கள் முதலாகிய சமஸ்தான பேரும் கூடி வீரமாறனை மறித்து எங்கள் ராசாவினுடைய உத்திரவுமில்லாமல் போக வேட்டுகிற தில்லையென்றும் மறித்துக் கொண்ட நீர் எந்த தேசம் நீர் எந்த பட்டணம் நீர் என்ன கவையாடா இத்தனை புசபல பராக்கிரமத்துனாலே இவ்விடத்துக்கு வந்ததென்னவென்று கேட்டார்கள். அப்போ வீரமாரனிருந்து நாம் நாடி வந்த காரியம் ஏதென்ற கேழ்க்குறீர்களோ இந்த பட்டணமாளப்பட்ட செகவீரராசகுமார்த்தியை தமிழ் சொரி சிந்தாமணி என்கிற ராச குமார்த்தி தமிழுக்கு நானே பெரியவளென்று தமிழ் கொடியுங் கட்டிக் கொண்டு என்னுடைய கவிக்கு உத்திரஞ் சொல்லி என்னை பருக்கு பாரியாகுறமென்று சொல்லிக் கொண்டிருக்கிறாளாம். அப்படிக் கொத்தப் பெண்ணை நாம் பாத்து போகவேணுமென்று சொன்ன விருத்தம்:-

செந்திருவனையாளந்த தென்மொழி கொடியைக் கேட்டு
அந்த மறை .... வென்று அவனிடு.... முலகம் போத்த
சுந்திரத்தழுகு போன்ற தோகையை மணம்புணர்ந்து
என்று தானுரைக்க தானு மறுமொழி யுரைக்கலுத்தார்.

வாராய் தம்பி நீயோ சிறுபிள்ளையாயிருக்கிறாய். உனக்கு எது விபரம் தெரியும்? இந்த வார்த்தையை எங்களுடனே சொன்ன போலே பிள்ளை ஒருவருடனே சொன்னால் உன்னுடைய ஊருக்கு ஊனம் வருமென்று சொன்னார்கள். அப்போ வீரமாரனிருந்து நல்லது நான் வந்ததுக்கு அடையாளமென்னவென்று என்னையும் போக வொட்டாமல் மறித்துக் கொண்டீர்கள். ஆனால் நான் வந்த சேதி சிந்தாமணிக்கு ஒரு சீட்டு கவிதான் எழுதி அனுப்பிவிச்சு அந்த கவிக்கு மறு உத்திரம் கேட்டுக் கொண்ட போறேன். ஒரு ஏடும் எழுத்தாணியும் தாருங்கோள் என்று வாங்கி சீட்டுக்கவி எழுதின விபரம்:-

தென்பாங்கு நாளும் தமிழ்குறியோன் தெக்ஷிணம்
விசை நகரந் தன்னில் வாழ்வோன்
அன்பாய் வீரதுரங்கனென் பேர் அரசாலும்
வீரமார னென்பேர்
உன்பார் கேட்டுவந்தேன் உகர்ந்தே மறித்தார் வாசலிலே
அன்பாய் நீர்தான் அழைப்பித்தால் யடவே
யுரைபடுபன் யாகமுமே

என்று மாறன் சீட்டுக்கவி எழுதி அவசரக்காரர் கையில் கொடுத்து அனுப்பிவிச்சான். அந்த அவசரக்காரர் கவியைக் கொண்டு போய் சிந்தாமணி சமூகத்திலே வைத்து கை கட்டிக் கொண்டு நின்றார்கள். அப்போ அந்த சீட்டு கவியை தமிழ் சிந்தாமணி எடுத்து வாசித்துப் பார்த்து வெகு சந்தோஷப்பட்டு அப்படிக் கொத்த வல்லாண்மைக் காரனை பார்க்க வேணுமென்று வரிசை ஊழியக்கார்ச்சியை சேவுகர் கட்டியக்காரனை அனுப்பி அழைச்சு வரச்

சொன்னள். அன்னேரமே இவர்கள் வீரமாரன் அண்டையிலே வந்து உம்மை தமிழ்ச் சிந்தாமணி அழைத்து வரச் சொன்னாளென்று சொன்னார்கள். அன்னேரமே வீரமாறன் புறப்பட்டு தொளாயிரத்து தொண்ணூத் தொன்பது வாசலுங் கடந்து முத்து நவமணி மேடையிலே வந்தான்.

இவன் வந்த சேதி தமிழ் சிந்தாமணிக் கேட்டு கொலுவிலே வந்திருக்கிற பாவனை எப்படியென்றால் வயிடூரிய மேடையிலே போற பந்தலிட்டு புஷ்ப்ப மாரி பொழிய ஆயிரங்கன்னிமார் அருகே இருந்து ரெட்டை கவுரி வீச வங்காக்கவுரி பிடிக்க ரத்தின கவுரி வீச களப கஸ்தூரி பன்னிராலே சிறுமாரி தூவ சாம்பிராணி தூபமும் சந்திரனை சூரியனை மறைக்கத்தக்கதாகவும் செந்தமிழ்வாணர் பைந்தமிழ்ப் பாட சிந்த நூதலார் பந்தெட்டி கூடி கூற மந்திரகவச வனுதரயிருபால கெந்தமணிந்து களங்க மத்தோடே ஆடிய மின்னார் ஆலாத்தியேந்த சேடியர் மகிழ்ந்து குவட்டி பிடிக்க மன்னியர் வந்து வரிசையாய் நிற்க கன்னியர் நடமை செய் செய்வென்ன நட்டுவரெல்லாம் வட்டம் பிடிக்க மத்தளமிடக்கை மல்லி முழங்க ஒத்தை சங்கு ஒளி பிற முழங்க ரெட்டை சங்குயிதமுடன் முழங்க வெங்கல கொம்புத விருது முழங்க நாக தவில் தம்பட்டம் சதிருடன் முழங்க பேரிகை எழில் பெற முழங்க, பிள்ளைமார் பிருமணறிய சமுத்திராதிபர் அன்பத்தாரு தேசத்தி லுண்டான ராசவர்கமெல்லாம் கொலு முகத்திலே வந்து கையிகட்டிக் கொண்டு நிற்கிற வரிசை பாலிக்க மறு

மன்னியர் வரவிட்டு எட்டு திக்கும் பதினாறு கோணமும் வாதைகழுகு மஞ்சாள்ளிஞ்சி தூக்கி நிலைக்கண்ணாடியள் நெறியுடன் தூக்கி கெந்த கஸ்தூரியும் புனுகு, சவ்வாது, மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, வெட்டி வேர்க் கொழுந்து இது முதலான பரிமள வாசனையுடனே இருந்து கொண்டு தமிழ் வாசனை பாராட்டிக் கொண்டு இருக்கிற வேளையிலே அந்த வீரமாறனை அழைக்கச் சொன்னாள். அப்போ வீரமாரன் புறப்பட்டு உல்லாச நடையாக வந்து தமிழ் சிந்தாமணி இருக்கிற கொலுவிலே சத்தே இடம் விடச் சொல்லி சரிசிங்காதனமாக சமிதனாதானாக இருந்தான். அப்போ சிந்தாமணியானவள் இவன் சரி சிங்காதனத்திலே மதியாமல் இருக்கலாவதென்று மந்திர வாளும் கையிலே பிடித்துக் கொண்ட கோவமெழும்பி பராக்கிரமத்தோடும் இருக்கப்பட்ட வீரமாரனை பாத்து சீறிச் சொன்ன வெண்பா:-

எந்த ஊரென்றாள் இருந்த மன்னன்
அன்னேரம் அநதருக காரசென்றாள்
முந்த யில்லை யில்லையோ வென்றாள்
எடுப்புநீர் வைக்க தலையரி யரியல்லாத்தவம்

**பின்னும் வெண்பா :**

எவ்வூரிருந்தீர் இருந்ததுவும் கும்பிகுளம்
அவ்வூரிலே ஊரே நீயாதரித்தாய்
செவ்வாய் கருஊரில் தங்கி கனத்தவழியால்சென்று
இவ்வூரில் வந்த வரரிது

இளைத்தவர்கள் பாமாய் எல்லவர்க்கு
முதவிகளாய் இனத்தாப நல்லத்
துளைத்தமணி முத்திக்கு மாலை மார்பா
துலங்கு தமிழ்விசை நகரந்தன்னில் வாழும்
களைத்த மதன் மணையான வீரமார் காவலனே
இக்கதையை கருதுவாயே

ராசா :

திருவருள் பொழியுஞ்கச்சி செம்பொன்னம் பலத்திலாடும்
அருள்புரியரனார் பங்கில் மறந்தபார்வதியார் செய்யும்
தருவர மனாலெட்டான சண்முகனார் தாயார் கையில்
லொருஇருழி நெலவென்று ரைக்கலுற்றான்.

சிந்தாமணி :

வாய்தனிலே காலுமுண்டு அதனாலோடும்
மினிதானடி பிடித்தாலும் பிடிபடாது
மாயவரு மறிந்தாலும் நின்றால் நிற்கும்
பார்தட வாயிருந்தாலும் பொலுமப்போ
சாயலிலே அஞ்சு வண்ணமாகத் தோணும்
தலையற வெட்டுகிலும் தான்சாகாது
நெயிக்கலை தமிழ் அறியும் வீரமாறா
நிச்சயமா இக்கதையெ நிகழ்த்துவாயே

ராசா :

விண்ணிலே தானிருந்து வாழ்ந்தே பாய்ந்து
வீரிய பூலோகமெல்லாம் விளைவேச் செய்து
கண்ணிலே தாநீரூந்து களையே தீர்ந்து
காதல் வீடாய் தான்தீர்ந்து களிப்பேயாகும்
மின்னிலே தானிருந்து சிறந்துவீறும்

மகதேவர் திருச்சடையில் வளர்ந்த தென்றும்
பண்ணியதோர் தளத்தாலும் பாவம் தீர்க்கும் பரமர்சடைகெங்கை
என்றும் பகரலாமே

**சிந்தாமணி :**

உருமுலைக் காரியாரடுக்கலை யுரவியாருருனா டொங்கு
முலாவியர் கன்னியார்
பெருவிலைக் காரியார் நித்தவினோதியார் பெரி
யோளாயுமயினாவாய்க் கொண்டாடு வாள்
வருவிலைக்கும் விருந்துக்கும் நல்லவளா மன்னர்
மோகினி கலியாணம் கச்சியார்
தெருவிலே இச்சைபாடி நட்டடவள் தேவதாசியும்
மல்லவும் செப்புமே.

**ராசா :**

அத்திபுரி மரமர் பதமனு தினமும் பூசை பன்றிஅன்பே செய்து
பத்தருட நிந்திரனார் மலரேதூவி பாலென கறுளுமென்
பணியே செய்ய
சத்தியுடன் மாலயனும் முனிவர்தாமும் தாரணியில் இந்திரனார்
தழைக்கவேணும்
புத்திரராயறியுமென்ன அரிந்தோ மென்று புனிதருள்
செய்பின்பு
புகழ்பெற்ற சித்திரறா புத்திரரிருந்து சிறந்தேவாழ
செனமிகுந்த திருப்பசு வென்றிருப் பேரளுமெ

**சிந்தாமணி :**

பருப்பளிப்பார் நெய்கொடுப்பார் பாலுமீவார்
பலவிதமாய்ச் சோரிடுவார் பாதிப்பூவை
அருப்புடன் அருந்தினக்கால் கசந்து தோணும்
மேனியெல்லாம் செவந்த பட்டையெ தரிப்பார் நல்ல

பருப்புமுண்டு கொம்புமுண்டு யிடையுமுண்டு
வஞ்சரைப் போலில்லையென்று பேர்வழங்கத்தாங்கி
இருப்பாவர் வெகுகபடர்ட கண்டாய் கச்சிவாழ்
வீரமான இக்கதையெ விளம்புவாயே

*ராசகுமாரன் :*

இலக்கமுடன் காவியங்கள் நண்ணூல் வல்ல
இசையறிந்து தமிழ்சொரியும் யிளவஞ்சிமாதே
துலக்கமுடனினைந்து பொருள் சொன்னவார்த்தை
தொல்லுலகில் விருக்ஷமதாய் தோணிநிற்கும்
கலக்கமுடனாடு தற்கோமறையோர்ச் சலககல
சனங்களும் தன்பேர் பூவென்று
உலக்கமுடனிருள களவொளியுமாகும்
முலகமல்லாம் பெரிலுபனகு பபெண்ணாரே

*சிந்தாமணி :*

கொம்புமுண்டு செவியில்லை வாலுமுண்டு
கூவெனவே கூப்புடு வாயுமில்லை
இன்பமுடனெவர் கையிலு முழுக்கலாகா யிருப்பார்சற்றே
கையிவிட்டால் லெடுயற்ற வொட்டா
அம்பிதீலும் வெகுதுறுசு கடிதெ. . . . .லா
அரசருமே அவர்பேர் கொண்டவனியாள்வா
தம்பமெளவு யிருடையா மிருகமல்லா
தழைத்த செல்ல வீரதுரனதந்தை
மைந்தா நம்பருனர கருதிவளர் கச்சிநாடா
நல்லகதை யிதின்பேரை நவிலுவாயே

*ராசகுமாரன் :*

திக்குலகில் தாரணியில் மீதிலங்கு தித்தித்து
தான்மாறி அருப்பு முண்டாய்

மடலரும் பூவூவுமுடன் மரமாய் நின்று
  மாநிலத்தார் மூணுகோடி வகுத்த பின்பு
திடமுடன் தனதனையெ நனைத்திடித்து
  செயராசன் பாலிருந்து செயமேயாகும்
பட்டமுடன் முடிப்பொறுக்கும் காலிகாலி
  பட்டமெயநவர் பேரை பகாலாமே

**வசனம் :**

இப்படி ராசகுமாரனும் தமிழ்ச் சொரிசிந்தாமணியும் ஒருவருக்கொருவர் தோர்வையில்லாமல் தமிழினுடைய பிற பலியத்தை சொல்லிக் கொண்டு இருக்கிறபோது ராசகுமாரன் மனக்கவலையுடன் நம்மை ஆக்கினை பண்ணுவாளோவென்று மனதிலே நினைந்துயீனவும் பண்ணுவாளோவென்று நினைந்து யினித்தயிரியம் விடலாகாதென்று கண்களிலே நெருப்பெழ கன்னிகையை பார்த்து சொன்ன விருத்தம்:-

மண்ணிழந்து திருமடந்தை மறுநகரில் விறகுவித்து
  வறுமையாகி தனநினத்தை வருந்தாமல் நிச்சாதங்....
நினனை பாகி மின்னுநவமணியுமென்னே அவளுமின்றாள்
  விவிமதிக்க மாட்டாமல் வெந்தர ஆய்ந்து
உன்னுடைய கெடி கெட்டு வந்தென நிந்த ஒளிமணியெ
  கவியைச் சொல்லென உரைத்த வாறே.

என்று வீரமாறன் சொன்ன கவிக்கு ஒரு உத்திர்வும் சொல்ல மாட்டாமல் இருந்ததென்னா. அந்தப்படி மவுனமா இருந்தாலும் உன்னை விட்டு விடுவேனோ. இந்தப்படியல்லோ தமிழ்க்கு நானே பெரியவள் என்று

தேசத்தை ஆளப்பட்ட ராசாக்களை வாயினாலே மிரட்டி வெகுபேரையும் ஆக்கினை செய்துக் கொண்டு இருந்தாய். நான் கவிக்கு ஆசுமதுரமல்லா இந்தக் கவிக்கு பயன் சொல்ல மாட்டாதே போனாய். நல்லது இப்பவும் இந்தக் கவிக்கு வெடிஞ்சு ரெண்டு நாழிக்குள்ளே தான் சொல்லு கிறாயோவென்று கேட்டபோது பேசாமல் தானே இருந்தாள். அப்போது தமிழ்ச்சொரி சிந்தாமணி அண்டையிலே இருக்கப்பட்ட வரிசை முறைக்காரிகள் தாதிமார் ஊழியக்காரியள் இவர்களெல்லாரும் நடுநடுங்கி தனித்தனியே போய் ஏது சொல்லுவார்கள்.

இன்னாள் வரைக்கும் நம்முடைய சிந்தாமணியெ தமிழ்க்குத் தொர்ருவை பண்ணின பேருமில்லை யிப்போ சிந்தாமணிக்கு உத்திரசனத்துக்கம வந்துதென்று முகம் கொம்பி இருந்தத்தின் பிறகு சமிகா வசிகா தேவதேவேந்திரர் அலங்கிறுத்துரை மக்கள் பிள்ளைமார் பிரும்மணர்கள் சுத்தங்கமுத்தி முத்திரை மனுஷர் விதரணர் சுகந்த மந்திரியார் தந்திரியோகிகள் இவர்கள் முதலான பேரும் தலைகுனிந்து துரும்பை எடுத்துக் கிள்ளிக் கொண்டிருந்தார்கள்.

பிறகு தமிழ்ச் சொரி சிந்தாமணியானவள் சர்வலோகப் பிரியாசனமான சகலகலைவல்ல சாம்புராச்சிய லக்ஷ்மி கடாக்ஷமுள்ள முகம் கோணிச் சத்தெகுறு விட்டுது அப்போ வீரமாரனிருந்து ஒகோ சிந்தாமணியே நீ சொன்ன கவிக்கெல்லாம் நான் உரை சொன்னேன். நான் சொன்ன ஒரு கவிக்கு நீ சொல்ல

வேண்டாமோ இத்தனை மார்க்கம் பண்ண வேணுமோ. நல்லது. இப்பவும் எழுத்தாணியும் ஓலையையும் தரச்சொல்லி வாங்கி இந்த கவிக்க வெடிந்தாகிலும் உரை சொல்லென்று எழுதி ஆசார வாசலிலே கட்டி வைத்து அங்கே இருக்கிற ஒரு பேர்களடனே நான் வெடிந்து நாலு நாழிக்குள்ளே வருகிறேன். இந்த கவியை பத்திரமாய் பாத்துக் கொள்ளுங்கோள் என்றுச் சொல்லி தமிழ்ச் சொரி சிந்தாமணிக்குப் பூ முடிக்கிற பூவாணிச்சி வீட்டிலே வந்திருந்தான். இப்பால் தமிழ்ச் சொரிசிந்தாமணி வீரமாறன் போன சேதி கேட்டு சுறுட்டி எழுந்திருந்து கத்து சொல்லி கவிவாணர்களை அழைத்து வரச்சொல்லி அருகே வைத்துக் கொண்டு அந்த வீரமாரன் கட்டி வைத்த கவியையும் அவிழ்த்து வரச்சொல்லி பார்க்கிறபோது அந்த கவிக்கு பயன் பிடிபட்டதல்லா. ஆகையினாலே அந்த வித்து வாங்கிஷரைப் போகச்சொல்லிப் போட்டு அந்த வீரமாரனை மோசம் பண்ணி கொண்ணுப் போட வேணுமென்று வெஷமாறிக் கொண்ட பாவினை எப்படி என்றால் சர்வாபரணமெல்லாம் பூட்டிக் கொண்டு நல்ல சந்திர பிறை, ஊர்வசி, அருந்துதி, இந்திராணி. பூலோக சௌந்திரி கிரிசம் பொதி காம்பொதி யிந்த பெண்களுக்கு மதிகமான பெண்போலே வேஷமாறிக் கொண்டு அன்ன மயில் போலே நடை சாயல் கொண்டு வீரமாரனண்டையிலே வந்து தெண்டன் பண்ணினாள்.

அப்போ வீரமாரன் இவளைக் கண்டு சந்தோஷப்பட்டு சொன்ன விருத்தம்:-

அயில்விழி புரளக் கூறல் அழகிய மாறனசெய்ய
மயிலினச்சாயல் போன்ற வஞ்சியே கஞ்சமாதே
பயில்நடைமிருந்தி பணிவிடை துவளக்காதல்
குயில்மொழி மடந்தெயிங்கே வந்தது கூறுமென்றான்

வீரமாரன் சொன்னத்தின் பிறகு வேஷமாறி வந்த தமிழ்ச்சொரி சிந்தாமணி சொன்ன விருத்தம்:-

செந்திரு புயமானே மாலே சேகதலம் பிறக்க வந்த
கந்தனெ கருணையாளாக் கருதலாத்தம்பிரானே
உன்தரைப் பாதங்கண்டு உனதருள் பெறவே வேண்டி
வந்தெனைக் காக்குமய்யா மறுமொழி இல்லையென்றாள்

அப்போ வீரமாரனிருந்து வாராய் பெண்ணே நீயாருடாய் கோத்திரம் என்று கேட்டான். அப்போ வேஷமாறி வந்த தமிழ்ச் சொரி சிந்தாமணி இருந்து நான் இந்தப் பட்டணமாளப்பட்ட செகவீரராசா வினுடைய மந்திரி மகள். என் பெயர் வாசல் சவுந்தரியென்று சொன்னாள். அப்போ வீரமாரனிருந்து அப்பேர்ப்பட்ட மந்திரி மகள் என்னண்டையிலே வர வந்த காரியமென்னவென்று கேட்டான். அப்போ மந்திரி மகளாக இருந்துதோ தமிழ்ச் சொரி சிந்தாமணியுடனே ஒரு கவிதை சொன்னீரோ. அந்த கவிதைக்கு அவள் பயன் சொல்லுகிறதுக்கு மின்னே நானே அந்த கவிக்கு பயன் சொல்லத்தக்கதாக திருவாக்கு அருளுமென்று கேட்டாள்.

அப்போ வீரமாரனிருந்து நல்ல அந்தக் கவிக்குப் பயன் சொல்லுகிறேன். உன் பேரிலே எனக்கு ஆசை மோகமா இருக்குது. அது தீரத்தக்கதாக மாரிலே மன்மத

பாணம் பாராகட்டி புனங்கனு மாத்தி போலே பாவித்துக் கொண்டிருந்து அனுப்பிவிக்குற வேளையிலே அந்த கவிக்கு உரை சொல்லுகிறேன் என்று வீரமாரன் சொல்ல மந்திரி மகளாக வந்த வாசல் சௌந்தரி இருந்து எனக்கு இண்ணைக்கு நேரமில்லை காமலீலை பாராட்டுகிறது பாரமல்லா கவிக்குப் பயன் சொல்லித் தரவேணுமென்று கேட்டாள். நீ காமலீலை பாராட்டிப் போமளவும் உன் கழுத்திலே இருக்கிற பூஷணங்களையெல்லாம் கழட்டி என் வசத்திலே அடவாக வைத்தியேயானால் அந்த கவிக்குப் பயன் சொல்லி தருகிறோம் என்று சொன்னான். நல்லதாச்சுது என்று மந்திரிகுமாரித்தி போலே இருக்கிற தமிழ்சொரி சிந்தாமணி தன் கழுத்திலே கிடக்கும் உடமையெல்லாம் கழத்திக் கொடுத்தாள். அந்த உடமை எல்லாம் வாங்கி கட்டிக் கொண்டு தங்கள் தகப்பனான மந்திரி கொண்ணுப் போட்டதின் பிறகு தங்கள் தாயார் பூர்ண சொற்பத்துடனே பறச்சேரியிலே வந்து என்னைப் பெற்றாள். என்னைப் பெற்ற சேதியும் நான் சமத்தனான பிறகு ராசகுமாரத்தி இவளுடைய வர்தமானங்கேட்டு வந்தேனென்று அந்த கவிக்குப் பயன் சொன்னான்.

அன்னேரம் மந்திரி மகளாக வந்த ராசகுமார்த்தி அந்த கவிக்கு ஆறும் பயனறியப் போகாதென்று சந்தோஷித்து வெளியிலே போய் வருகிறேன் என்று உபாய சறப்பினையாக அன்னேரம் புறப்பட்டுப் போய் தன்னரன்மனையிலே இருந்து கொண்டு வெடிஞ்சு எழுந்திருந்து சரிகலம் சுத்தி பண்ணிக்கொண்டு நேமநிஷ்டை முடித்துக் கொண்டு அதிபராக்கிமத் தோடு

ராசகுமாரனை போசனமருந்தி அவள் அடகு வைத்துப் போன ஆபரணங்களும் மடியிலே கட்டிக் கொண்டு அந்த ராசகுமார்த்தியை ஒரு பேச்சிலே கவத்தகம் பண்ணிப் போடுகிறேனென்று வருகிற வேளையிலே அந்த ராசகுமார்த்தி கொலு சிங்காரம் பண்ணி ஸர்வசினங்களோடும் கூடி சிங்கானத்திலே இருந்து கொண்டு மந்திரவாளை வரைவிட்டு உறுவிக்கொண்டு அதிக பராக்கிரமத்தோடும் கூடி அந்த ராசகுமாரன் கவிக்கு பொருள் கேட்டவுடனே பொருள் சொல்லி வெட்டிப் போடவேணுமென்று பின் இழுத்துப் போட பாரிகாரரையும் அழைத்து வைத்துக் கொண்டு இருக்கிற வேளையிலே ராசகுமாரன் அவளிருக்கிற கொலுவிலே அதிக பாரக்கிரமத்தோடும் கூடி சிங்காதனத்திலே வந்திருந்தான். அவன் இருக்கிற படிகண்டு ராசகுமார்த்தி அதிகோபம் கொண்டு நீர் சொன்ன கவிக்கு நான் பொருள் சொல்லவோவென்று கேழ்ப்பாள். அப்போ ராசகுமாரன் சொன்ன வசனம்:- கவிக்கு பொருள்பின்னை கேழ்க்சிகுளுமே யல்லாமல் நான் ராத்திரி ஒரு சொற்பனங் கண்டேன். அந்த சொர்பனத்தைக் கேளென்று சொன்னான். அன்னேரம் சீறிப்பார்த்து அந்த கினாவை சொல்லென்று கேட்டாள். அப்போரு ராசகுமாரன் சொன்ன வெண்பா:-

சொல்லகேள் மின்னே பூஞ்சோலை எளங்கிளிபோல்
வெல்லதவித்துருவாய் விரகருந்து நல்ல
கவிக்கொரையெதென்றாள்
கனத்த பணிவாங்கி செஷஷிக் கொணர செய்தேன் சிறந்து

வெண்பா :

சிறைந்த உடனே செழுங்கிள்ளை மெள்ள பறந்து
செறகொடிந்து பாங்கரித்து கொதந்த உயர்தம்பிமதி
மறந்து சங்கை கெட்டு இப்புவியில் - பொன்சிறவு யீந்த
நாக்கால மென்மேல்லொரு குருவிவந்து விழகண்டனமன
சிந்தையுடன் காலும் சிறகும் என் கையில் அகப்பட்டிருக்க
கமலும் அது பிடிக்க மீறி.

வெண்பா :

மீறிப்பறவை மிக மெலிந்து ஊன்றுடைந்து
சீறிபணிதீ சிறகழிந்து மீறியின் அந்த அடையாளம்
அத்தினியுமிந்த சபையிலே பொனதபிர்

என்று ராசகுமாரன் சொன்னது கேட்டு தமிழ்சொரி சிந்தாமணி சிறகழிந்து மீறியினி அந்த அடையாளம் அத்தினியும் மிந்தசபையிலே போனபிர் என்று ராசகுமாரன் சொன்னது கேட்டு தமிழ்சொரி சிந்தாமணி சொன்ன வெண்பா:-

இந்த சபையில் வெடுப்பெறட மன்னவனே
கொகதனரும் குழலாள கையி அமத்தி
கந்தனுட நாடு நாடென்றாள நலகத்திரு கண்காட்டி
மெள்ள மூடுமுடென்றாள் முகந்து

என்று ராசகுமாரன் சொன்ன விருத்தம்:-

பருத்தி யேழுலக மெங்கம் பாருடதரசர்தம்மை
வருந்திசை தழுழால் வெண்ணுவாழ மலைசூட்டு நண்ணான்
குருதி யிக்கதையால் யானும் தொறபபனத் தோத்தேனய்யா
இருதிசிங்கானத்தில் இருமனம் தொழுது வீழ்ந்தாள்.

வசனம் :

என்று ராசகுமார்த்தி சிங்காதனம் விட்டு எழுந்திருந்து கொலுவாக நிற்கிற பேரை எல்லாம் வரிசை படியே வசிகரம் முறை பண்ணி கட்டளையிட்டு அந்த ராசகுமாரனாகிய வீரமாரன் சிங்கானத்திலிருக்க அவர்கள் எல்லோரும் அந்தபடி செவித்து நிற்கச் சொல்லி மத்துமுண்டான துரைமக்கள் மன்னன் மண்டலிகா சகலமான பேரையும் இந்த ராசகுமாரனை சொல்லி நான் கொலுவுவிட்டு எழுந்திருந்து அரமனைக்குள்ளே போய் தங்க தகப்பனார் செகவீரராமனைக் கண்டு சொல்லுகிற விருத்தம்:-

யெந்தனைப் பயின்றகோவே ராசா பூசாதிவேந்தே
சுந்திரதழகு போன்ற துரைகள் வெந்திரனே கேளாய்
வந்தவன் தரசை வெண்ணவாழ மாலை சூட்டி
நின்றாள்
இந்திளம் கோவை வெல்லா யாவத்தால்
முடியதென்றாள்.

இதற்கு மறு உத்திரம் ராசா சொன்ன விருத்தம்:-

என்றவள் சொன்ன பின்பு யிராசகோன் மகிழ்ந்து
நோக்கி
நன்று நணறெனவே கூறி நயமுகமுயர்ந்து பாரில்
இன்று சேர்றாசர்க் கெல்லாம் எழுதும்
சொபனத்தின் ஓலை
முந்து சொல் தவிலில்லோசை முழகென விடைக்
குடுத்தான்.

இந்த விருத்தம் ராசகுமார்த்தி கேட்டு எனக்கு கலியாணம் முகித்து கொள்ள வேணும். பட்டணமெல்லாம் அலங்கிதம் பண்ணச் சொல்லி தங்கள் தகப்பனாருடனே சொன்னாள். அன்னேரமே செகவீரராசா கேட்டு தன்னுடைய பட்டணமெல்லாம் அலங்கரிக்க சொல்லி பறைபறை போடுவித்தார். வறைபறை வகுப்பும் யறையறை முரசும் தவில் பறை முழங்க வெண்பணி மகமெரு நிருத்திடுவார். பந்தலுயர்ந்திடவே சிலபேர்கள் பவழக்காலகள் நிறைத்திடுவார் திரை இடுவார்கள். நவமணி மேடையில் நவறத்தோரணங்கள் காட்டிடுவார்கள். சித்திர மெழுது திசைதோறும் தூக்கிருவார்மலர் தூக்கிடுவார் குறையறவே சிலமுத்து நிறைந்திடுவார். சொங்குடன்னான் குரு வித்திடுவார் குலாவிய சந்தன மகில் குங்குமம் தெருவுக்கு நிறைத்திடுவார். குங்குமங்கள் பலகளைகள் விடுவிப்பார். அழகுள்ள பொம்மைகள் நாட்டிடுவார் அணி அணியாக கதலி நிறைத்திடுவார். அஞ்சுவர்ண சல்லி தூக்கிடுவார் சிலர். அம்புலிக்கழகு நிறைத்திடுவார் அழகுள கெருடக் கொடியணிவார் சிலர். அந்திரக் கலை பூவணவார் மஞ்சளோடிஞ்சியள் தூக்கிடுவார் சிலர்.

மாந்துளிர் பூத்திட பாங்கணிவார் வருஞ்சிலையதனைக் கரும்பு நிறைப்பார் மாதளைப் பூவும் நிறைத்திடுவார். கொஞ்சிய கிளியணி வஞ்சிறு பறவைகள் குயிலொடு னாவிகுறித்திடுவார் குணமுள்ள மிருகம் தங்கள் பன்னிரை குழைத்தின மிதில் தெளித்திடுவார். அஞ்சன விழியார் தந்தலையார் அழகுளதீபம் நிறைத்திடுவார்.

அதிபருபூரண கும்ப நிறைப்பார் அழ காலாத்தி யெடுப்பார். சிலர் அண்டர்கள பலபல கொண்டெறிவார். அஷ்டாங்க திசை கட்டியகாரர் அணி அணி சென்று படித்திடுவார். மழைக்காலத்தில் யிடிபோலே வெடிலகள் நிறக்கதிரை மரைந்திடுவார். வருபூபாணம் பிறுசொடு நிலவிடுக்கரம் ஆகாச பாணம் மிகவிடுவார். சங்குவளை பெறு செங்கழநிர நீருமணி தை தொறும் நிறைத்திடுவார்கள். பந்தல் கிரிமடம் யிலணையார் சத்தியா சிலர் சிலர் தமிழ்ச் சொரிவார் தமிழ் சொரி சிந்தாமணி யிடசொபனகாரியமெ காரணபணிகள் அன்பத்தாறு தேசத்தார் மகுடமந்தரதிகள் பதினெட்டு சாதி செனங்களு மகாசமுத்திரம் போலே கூடி தமிழ் சொரி சிந்தாமணியை அலங்கிருதம் பண்ணி நிறைமுத்துனாழி வைத்து மாணிக்க தீபமெந்தி வயிடூரிய பலகை பொட்டு பட்டாடை விரித்து முளை தெளித்து பஞ்ச யோகமும் கூடினவாரமும் நோக்கிய நக்ஷத்திரமும் கூடின சுபதினத்தில் ராசாதி ராசனான வீரமாரனுக் பாரியாக தமிழ்ச்சொரி சிந்தாமணியை பூச்சூடி தேவேந்திரன் கொலுவாக வீரமாரன் கைப்பிடித்து சீருலாவிய திசை பெறுச்சுருவுங் கொடுத்து சிதனவகை உத்தண்டமாலையுகம் சட்டை சராளமும் ரத்தின பதக்கமும் கெம்பு வைடூரியமும் பட்டு பட்டா வெளியும் பச்சை பரிசையும் மாணிக்க நாக்காலியும் தங்க பல்லக்கும் ஒத்தைக் குடையும் வெத்தி சங்கும் வீரக்கொடியும் சிங்காதனமும் மாணிக்கவுறு மரகத குதிரையும் ஆனை குதிரை சேனையும் ஒட்டிய மேளமும் விருது செலுத்துகிற மந்திரவாளும் வெள்ளி வெண்கலமும் பொக்கிஷப் பொடியும் இதுமுதலான பலபல வரிசையும்

கொடுத்து கோசல நாடு கொடுத்து அத்துடனே சேர்ந்த தேசங்களிலேயும் சிறுது தேசமும் கொடுத்து மகாசந்தோஷத்துடனே கூடி செகராமராசா சொன்ன விருத்தம்:-

திருவிளக்கணை கீற்தி செகவீர ராமநெங்கோன்
மறுமலர் குறைவிடுக்கு மாதுலாள் தன்னை நோக்கி
தருமினி புகழின்னாளெ சந்தோஷ காலம் நீங்கள்
நிருதரை தன்னை என்று நீழ்விபுவியாள்
வீரென்றான்

**விருத்தம் :**

வாய்ந்தவேலரசன் கூறி மாதுலான தன்னை நோக்கி
வேந்தனே வீரமாறாய் யான்சொல்லும் விபரம் கேளாய்
நீதிசேந்தவள் தன்வந்து நிகழ்ந்திடார் கண்ணை வெட்டென
அந்திரத் தன்னை தங்கள் தன்னை அனுப்பினார் அரசர்கோவும்

**வசனம் :**

செகவீர மாரன் கேட்டு தமிழ்சொரி சிந்தாமணி சொன்ன விருத்தம்:-

அரசர் கோன்தனையும் போற்றி ஆயிழை தனையும் போற்றி
விளாசெறி குளசம் போன்ற வீரசிந்தாமணித்தென் காதல்
துரைசெறி வனிதை போற்றி கனனி வணங்கி நினமுறசறை
முழக்கஞ் சொல்லி முகுற்த மென்றெழுந்திருந்தாள்.

பின்றும் ராசகுமார்த்தி சொன்ன விருத்தம்:-

எழுந்திருந்துடனே தாங்கள் இசைந்த சீதனங்கள் சேர
முந்தமன நகைப்பார் பின்னும் முறைமுறையாக நோக்கி
தெளிந்தனர் கொலுவிலோரும் சேனையும் பதாதியோடும்

தொழுதுமுன் விரைந்ததூ சூரியன் மறைந்துதய்யா
சூரியன் மறைந்த தல்லால் துடிதொணி முழுங்கக்கேட்டு
காரிய மரிந்தோர் மீதுங் காவலர் கலங்கியோட
வீரமாரன் தனகிற்த்தி வேந்தர்கள் மனநடுங்க
பூரிகை விருதுகூறி பூவை தண்டிகை மேல்கொண்டாள்
பூவை தண்டிகை மேலேற புண்ணியன் தெசிமேல் கொண்டான்
தெய்வலோகத்தில் மின்பொலெ தெரிவையர் கவிவாணர் சேர்வை
யொற்றனை பசென்ன தடகரி பரிவாரமொடும்
கெரவை முத்து கந்தமன்னன் கோட்டையும் கடந்துதன்றே

**வசனம் :**

வீரமாறன் என்கிற ராசாவும் தமிழ்ச்சொரி சிந்தாமணியும் கோசலை நாடுவிட்டு சதிரங்க சேனையோடும் வெகு பிறசை நெருங்கி வர கெடி மன்னியர் கெற்பங் கலங்க அதிக பராக்கிறத்தோடும் புறப்பட்டு முன்னாள் வந்த வழியே வந்து தலைகீழும் காலுமேலுமாக தபசு பண்ணகிற சன்யாசியாரைக் கண்டு தெண்டம் பண்ணினார். அந்த சன்யாசியார் வெகு சந்தோஷப்பட்டு ஆசீர்வாதம் பண்ணி அனுப்பினார். அதின்பிறகு ராசகுமாரன் புறப்பட்டு நடந்தான். இவன் நடக்கிற அதட்டிக் கொண்டு குபேரன் இருக்கிற அழகாபுரி பட்டணமெல்லாங் கேட்டு முறிஞ்சு போற அதட்டி கண்டு வீரமாறன் ஆள் அனுப்பினான். அந்த சேதி கேட்டு சித்திரசேனன் சதிரங்க சேனையோடும் எதிர் கொண்டு வந்து அழைத்து போய் குபேரனையும் காண பண்ணி வித்துதனனொடே பெறந்த பெண்வாசல் சென்று சவுந்தரியென்கிற பெண்ணையும் கலியாணம் பண்ணிக்

கொடுத்து அந்தப் பெண்ணுக்குச் சிதனம் உடமையும் சிலது நாடுங் கொடுத்து பெண்ணையும் ராசகுமாரனையும் கூட்டி அனுப்பி விக்கிறபோது குபேரன் சொன்ன விருத்தம்:-

தெள்ளிய வரசே பிறமமகு ருந்திய மருங்கினாளை
அள்ளு சித்திடை பொறாத ஆயிழை அருமைமாது
கிள்ளையும் புனத்தில் ஆவை கிஞ்சுக மொழியினாலே
மெள்ளவே சந்தானமாக விடையெனத் தொழுது வீழ்ந்தாள்.

தொழுத வன்முகத்தை நோக்கி சூரிய வீரமாறன்
பழுதிலாக குபேரனோடும் பாத்து நீத்தெதோ சொல்வான்
முழுத்த மணியகோவே முகுற்தமென்றெனக்கு சிங்கம்
பழுதற அனுப்பிக் கொண்டு பணிநகர் கடந்து போனாள்.

**வசனம் :**

குபேரனையும் அனுப்பிக் கொண்டு தமிழ் சொரி சிந்தாமணியையும் சென சவுந்தரியையும் கூட்டிக் கொண்டு சதிரங்க சேனையோடும் கூட்டித்திரை கடல் போலே தான் இருந்த பறச்சேரியியேனொக்கி வீரமாரன் வருகிற அதட்டி கண்டு அந்த பறையன் எந்த ராசாக்கள் வருகிறார்களோ வென்று வெகுண்டெழுந்து தெண்டனாக விழுந்து சொல்லுகிற விருத்தம்:-

மன்னனே போற்றி போற்றி மகுடவர்த்தனனே போற்றி
போக தேவேந்திரனே போற்றி செய்யனே போற்றி போற்றி
திருமணி முதலே போற்றி மெய்யனே போற்றி போற்றி
வீரமாறராச போற்றி அய்யனே அரசேயென்று அடியிலே -
தொழுது நின்றான்

எ.து.:- அன்னேரம் அந்த ராசகுமாரன் பறையனை நோக்கிச் சொன்ன விருத்தம்.

பாரினில் விரையைப் போட்டு பயிர்தனை விளங்க காத்து
தாரகாமமான காலம் தவரி நின் போகா வண்ணம்
கலாகிய வருத்தத்தோடும் யிரங்கி பரச்சேரி வாசலில்
அருகாக கூடாரம் போட்டு ஆனை குதிரை சேனை

பரிவாங்களுக்கெல்லாம் படி பந்தல் அமத்தச் சொல்லி பறையனுடைனே சொல்லி கட்டளையிட்டு ரெண்டுதேவிமாரையுங் கூட்டிக் கொண்டு போறபோது வெற்றி மலர் புஷ்பசாதிகளும் கொண்டுபோய் தங்கள் தாயார் பாதத்திலே அர்சினை பண்ணி தாமும் தம்முட தேவிமாரும் கும்பிட்டுக் கொண்டு பாத துலக்கி சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி தன் தாயாரைக் கட்டிக் கொண்டான். அவையாருக்கும் அந்தபடி உபகாரம் பண்ணி கட்டிக் கொண்டான். அன்னேரம் ராசாவினிட தேவி தன் மகனை இருகையாலும் வாரி எடுத்து மடியிலே வைத்துக் கொண்டு சொன்ன விருத்தம்:-

விண்மனப் புவியாண்டு விதிமறந்தழித்து போது
தான்பெண் அரசே நோக்கி தளியுமிச்செரி பூந்து
ஆண்துணைக் கிறங்கி யுன்னையும் அவமாகத் தோத்தேன்
காண்பெருனா யென்றிருந்தேன் கண்களி திந்து தைய்யா.

களித்திருங்க தனதில் பால் தனத்தி விழிப திரங்களோடி
அழித்தொருகளும் கருமம் அடிக்கடி சிதறிநோக்கி
விழித்தனக் கண்களோடும் விழிபுனர் அருளைபாராய்
தெளித்தன அரசர் கோவின் திருமுகம் சார்ந்து நின்றாள்

அன்னேரம் ராசகுமாரநிருந்து சொன்ன விருத்தம்:-

**இத்தினி சித்தியெனொயெனைப் பயன்றர சர்கேசிவ**
**சித்திர திருவே தாயே திருமயிலாரெ கேளீர்**
**உதிர்த்துடனேயானும் உன்வச தெசமெங்கும்**
**உத்தாசான்னாகில் வீரா கொன்மகனு மல்லென்**

என்று மூன்று பாஷையும் கூறி அமுத கண்ணீரையும் பன்னிர் கொண்டு துடைத்து மரகதப்பல்லக்கிட்டு அவையாருக்குந் தந்த பல்லக்கிட்டு சிலது ஆடை ஆபரணமுங் கொடுத்துனூத் திருவது தாதிமாகும் கட்டளையிட்டு பறையனுக்கு பல்லக்கிட்டு தாயார் முதலான சதிரங்க சேனையோடும் கூடித் தாடக மலையிலே போய் பதஞ்சலி மகாமுனியை சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு அந்த தண்டிகையிலே அந்த ரிஷியையும் வைச்சுக் கொண்டு முன்பல்லக்காகப் போகச் சொல்லி புறப்பட்டு தனலாத்தங் கரையிலே வந்து கழுமரமுயிருந்த விடத்திலே கோவில் கட்டி பூசை நமஸ்காரமும் நடப்பிச்சு தெயபெ சிறமரமென்று பேருமிட்டு அந்த கானகம் கடந்து பிணம் திண்ணும் பூச்சியெ வளைந்துக் கொண்டு அத்தைப் பிடித்து அதின் தோலையுரித்து வந்து துந்துமி கட்டி அவடம் கடந்து வருகிறபோது ராசகுமாரன் வருகிற அதட்டிக் கேட்டு சந்திரகிரி பட்டணத்திலே இருக்கிற ராசா பயப்பட்டு நடு நடுங்கி இருந்தான்.

அந்த பட்டணத்தை வந்து வளைத்துக் கொண்டு அந்த ராசாவையும் ஆக்கினை பண்ணிப்போட்டு பொக்கிஷ பணத்தையெல்லாம் சூரையாடி அந்த

பரையனுக்கு பட்டம் கட்டி முத்திரை மோதிரமுங் கொடுத்து சந்திரகிரி பட்டணத்துக்கு ராசகுமார்த்தி சம்பேதி யென்கிற பெண்ணையும் அக்கினி சாக்ஷியாக கல்யாணம் பண்ணிக் கொண்டு அந்த பெண்ணுக்கு பல்லக்குயிடுவித்து அதிக கெறுவிதமாக சதிரங்க சேனையோடும் கூடி தன்னிட தகப்பனார் ஆண்டிருந்த விசை நகர பட்டணத்தை நோக்கி வருகிறபோது அந்த பட்டணத்தை ஆண்டிருந்த மந்திரியிந்த ராசாவுடனே எதுக்க போகாதென்று எதிர் கொண்டு காணிக்கையும் வைத்து தெண்டனாக விழுந்தான். மத்தும் பட்டணத்திலே உண்டான போர்கள் எல்லோரும் மந்திரிமார்களும் எதிர்கொண்டு பட்டணத்துக்குள்ளே வீரமாரனை அழைத்துக் கொண்டு போனார்கள்.

அன்னேரம் வீரமாரன் என்கிற ராசாவும் தங்கள் தகப்பனார் இருந்த கொலுவிலே இருக்க வேணுமென்று திதி வாரம் நக்ஷத்திரம் யோகம் கரணம் நல்ல சுபதினம் கூடின முகூர்த்தத்திலே கொலு நூராயிரத்து நாற்பத்தெண்ணாயிர மந்திரிமார்களும் மனை மண்டலிகளும் மத்து முண்டான பரிவார செனங்களும் கொலுவாக நிற்க இரநூறு கட்டியங் கூறிவரயிரு பீரமரத்தின் தீவிட்டி பிடிக்க புலவர் விருது கவிபாட அன்பதுனாயிரம் பெண்கள் அழகாலத்தியேந்தனாடக மங்கையர் ஆட பதினெட்டு மேள வாத்தியம் முழங்க சந்திர சூரியர்கள் கண்டு வெகுவாய் யிந்திர பதவி போலே சிங்கானத்திலே வீத்திருந்தான்.

வீரமாறன் சிங்காதனத்திலே இருந்தவுடனே திங்கள் மும்மாரி பொழிந்து பாலாறு பெருகி கயல் வயல் பாய்ந்து பருமிலாத்துள கற்பகக் கடவுள் வீச கருங்குயில் கூவி அருந்தமிழ்படிக் கவி புலவோர் தழைக்க வேதமிகவோத செழிக்கும் விசை நகரம் நன்னாடெ அப்படி ராஜ்யபாரம் தாங்கி இருக்கிற வேளையிலே வீரமாரன் என்கிற ராசகுமாரன் ஒருநாள் ராக்காலம் ஒருவனுமாய் நகரசோ தினைக்குப் புறப்பட்டு அவரவர் மனையிடந்தோறும் சேந்து சத்தடங்கி வருகிறபோது முன்னாள் கெங்காஸ்தானம் பண்ணப்போன பிராம்மணன் வாசலிலே பிறங்கேட்டு நிற்கிறபோது அந்த பிராம்மணனுடனே அவர் பாரியாகிய பிராம்மண ஸ்ரீ நீர் கெங்காஸ்தானம் பண்ணப் போன அதிசயம் சொல்ல வேணுமென்று கேட்டாள். ஆனால் சொல்லுகிறேன் கேளென்று சொல்லுவார்.

முன்னாள் ராஜ்யபரிபாரந்தாங்கி இருந்த ராசாவை மந்திரி அழைத்துப் போய் கொண்ணு போட்ட சேதியெல்லாஞ் சொல்லி ஆகையினாலே கெங்காஸ்தானம் போனேன்று சொன்னார். அந்தப் பேச்சை ராஜகுமாரன் கேட்டு உள்ளம் நடுங்கி அந்தமனை கடந்து அப்புரம் போகாதபோது ஒரு ஆலாரிவரிருந்துது அத்தை தாண்டவேணுமென்ற ஆரலின் மேலே கையை ஊணினான். இவன் கையை ஊணின விடத்திலே நல்ல பாம்பு இருந்து முட்டையிட்டுக் கொண்டு அந்த முட்டையின் பேரிலேயிருந்து அந்தப் பாம்பின் பேரிலே

அறியாமல் கையை ஊணின உடனே அந்த சர்பத்தின் தலையை சிக்கென பிடித்தளவிலே கையிலே பாம்பு சுத்திக் கொண்டு அதற்குப் பயப்படாமல் அப்புரம் கடந்து போறபோது தரித்திரவானான முஷ்டி எடுத்து காலக்ஷபம் பண்ணுகிற பிராம்மணன் வெளியே புறப்பட்டு சரீர சுத்தி பண்ணிக்கொண்டு நக்ஷத்திர வாசகம் பார்த்தான். ராமா ராமாவென்று பிராம்மணத்தியைக் கூப்பிட்டான்.

பிராம்மணத்தி ஓடி வந்து ஏன் கூப்பிட்டாய் என்று கேழ்க்கிறபோது இப்போ இந்த பட்டணத்துக்கு இருக்கிற ராசாவினிட ஜென்ம நக்ஷத்திரத்திலே வலது பக்கத்திலே ராகு தீண்டியிருக்கிறான். அதுக்கு நாம் சாந்தி பண்ண வேணும் என்று சொன்னான். அதுக்கு தன் கையிலே ஒன்றுமில்லாதது கண்டு அந்த ராசாவினுட புரோகிதனுடனே சொன்னார். புரோகிதன் கோபித்துக் கொண்டு மூணு வார்த்தையும் சொல்லி துரத்தி விட்டான். அன்னேரம் பிராம்மணன் ஓடிவந்து பெண்சாதியுடனே இந்த பேச்சை சொன்னார்.

அந்த பிராமண ஸ்த்ரி தாபத்திரயப்பட்டு ராசா நன்றாய் இருந்தால் அல்லோ இந்த பட்டணத்திலே நமக்கு முஷ்டியாகிலும் கிடைத்து சாப்பிடுகிறோம் என்ற தன் கழுத்திலேயிருந்த மங்கிலிய சூத்திரத்தை அவிழ்த்து அசல் வீட்டு பிராம்மணன் கையிலே அடவாக வைத்து நெய் வாங்கி வந்து ஓமம் வளத்தச் சொன்னாள். அந்நேரம் இந்த பிராமணன் அந்த ராசாவுக்கு தோஷம் போக்கத்தக்கதாக சாந்தி பண்ணினார். அன்னேரம் ராசகுமாரன் கையிலே

சுத்திக் கொண்டிருந்த பாம்பு துண்டந் துண்டமாக யித்து இத்து விழுந்து போச்சுது. அது கண்டு ராசகுமாரனுக்கு சந்தோஷம் வெகு மிதமில்லாமல் கெம்பீரமாக அவ்வடம் கடந்து ஒருபலஸ்த்திரி தெருவிலே வந்தார். வரபோது அதில் ஒரு பலஸ்திரீ சொல்லுகிற விருத்தம்:-

அத்த மனம்தனை முன்னாள் அமைச்சனும் குத்தம் பண்ணி பின்பு ஸந்தோஷமாக பூதலபாரம் தாங்கி உந்தி பந்திருக்கிகும் நாளில் உபைய பாதாளத்தோடும் வந்து மனசதிறோ அந்த மதிகேடு மனன தானோ என்று சொன்ன விருத்தம் கேட்டு ராசகுமாரன் சொல்லிப் போற விருத்தம்:-

மதிகெட்ட மனனென்ற வாறத்தையைக் கேட்டு
மன்னன் விதியிதுயென வேயந்த வேசியர் தெருகடந்து
அதிபதி கெருடன் சீறி அடைந்து வெண்கோபத்தோடு
பதிதனை நோக்கி யந்த பணிமுக வாசல் வந்தான்

**வசனம் :**

ராத்திரி காலம் போய் சூரியன் உதயமான பிற்பாடு ராசகுமாரன் சறுவாபரண அலங்காரத் தோடும் கொலு முகத்திலே வந்து சிங்காசனத்திலே இருக்கச்சே சகலசெனங்களும் நிறக கொலுவாக நிற்க கட்டியக்காரர் கட்டியஞ்சொல்ல அதிமோக ரம்பைகள் ஆலாத்தியேந்த அதிவீரபராக்கிரமமுள்ள வீரமாறன் கொலுவிருந்து அவசரகாரரை அழைத்து புரோகிதனையும் மந்திரியையும் அழைத்து வரச் சொல்லி உத்தாரம் கொடுத்தார். அவர்களை அப்படி அழைத்து வந்தார்கள்.

பிராம்மணனைப் பாத்து நேத்து என் பேரிலே பீல்லியெ ஓமம் வளத்ததென்னவென்று ஆக்கினை பண்ணிப் போடச் சொன்னான். அன்னேரம் அந்த பிராம்மணன் பயந்து நாம் பில்லி விடவுமில்லை. அற்பபுத்தி பண்ணவுமில்லை என்ற தன்னுட பூணூலை கழட்டப் போட்டு கடந்து குடுத்து ராத்திரி நடந்த சமாசாரமெல்லாம் சொன்னார். அவனை அப்போ நல்லது நிற்கச் சொல்லி கெங்காஸ்தானம் பண்ணப்போன பிராம்மணனை அழைப்பிச்சு கோபித்துக் கொண்டு அவனை கண்ணைப் பிடிங்கி போடச் சொல்லி கட்டளையிட்டார். அன்னேரம் அந்த பிராம்மணனுக்கு நிற்சீவனாய்ப் போய் நான் கெங்காஸ்தானம் பண்ணப்போன அதிசயம் பிராம்மணத்தியுடனே சொன்னேன். அதுவல்லாமல் வேறொன்றுமில்லையென்று பொஸ்தகத்தைப் போட்டு தாண்டிக் கொடுத்தாள். அதின்பிறகு அந்த பிராம்மணனையும் மந்திரியையும் தாயார் முதலான பேரையும் மத்துமுண்டான சேனையுங் கூட்டிக் கொண்டு சகல சினங்களோடும் கூடி தங்கள் தகப்பனாரைத் தள்ளிவிட்ட கிணத்தங்கரையிலே வந்து அந்த கிணத்தை பெரிய தடாகமாக வெட்டி வித்து அஷ்டகோணம் பிடித்து கட்டி வைத்து வதிஷ்டர் வேதமோத ஓமம் வளத்தி பூ தானம் கோதானம் சொர்ணதானம் அன்னதானம் பண்ணிவத்து கடின ஓமம் வளத்துகிறபோது அந்த ஓமத்தின் சத்தியிலே எழு பூதம் வந்து நித்தது.

அதின்பிறகு அஷ்ட வைரவர் பிறந்தான். அதின் பிறகு முப்பது முக்கோடி தேவர்களும் நார்பத்தெண்ணாயிரம்

ரிஷிகளும் கின்னரர் கிம்புருஷர் கெருட கந்துருவர் சித்திய வித்யாதரரும் பிரும்மா விஷ்ணு ருத்திரரும் விக்கினேஸ்பர சுப்பிரமண்ணியர் இந்திரன் இவர்கள் முதலான பேரெல்லாரும் வந்து காக்ஷி கொடுத்தார்கள். அப்போ ராசகுமாரன் தேவர்களைப் பார்த்து சொன்ன விசேஷம் என் தகப்பனார் எப்போதும் போலேயெழுந்திருந்து வரவேணுமென்று கேட்டான்.

அப்போ தேவேந்திரனும் மகாவிஷ்ணுவும் கூடி ஓமம் வுளர்த்தார்கள். அந்த ஓமத்திலே இருந்து கிணத்திலே விழுந்து மடிஞ்சுபோன வீரதுரந்திரன் மகாராஜா தூங்கி எழுந்திருந்தான். அப்போது சகலமானட தேவர்களும் கூடி காக்ஷி கொடுத்தார்கள். அந்த தேவர்களெல்லாம் அவரவர்கள் தங்கள் தங்கள் லோகங்களுக்குப் போனார்கள். அன்னேரம் அந்த அவையார் அந்த அக்கினி கிணத்திலே விழுந்து பாத்தாள். ஆறுமட்டாக வெட்டி அவடத்தே பாலாராக்க கட்டளை பண்ணி காமாக்ஷி அம்மன் என்று பேரும் பெத்து அநத் பாதாளத்திலே இருந்து வந்தாள். அந்த பாதஞ்சல ரிஷி அந்த பழமொழியெ முந்தி இருந்தத்துக் கல்லிலே தம்முட ரூபத்தை ஸததாம் பறித்து ஏகாம்பர நாதரென்று பேரும் பெத்து காஞ்சீபுரமென்று பட்டணமாகச் சொல்லி சாபம் பண்ணார்கள். அதின்பிறகு ராசகுமாரன் தங்கள் தகப்பனான வீரசூரதுரந்தரனென்கிற ராசாவின் காலிலே பொற்பூ முதலான மலர் சொரிந்து சாஷ்டாங்கமாக தெண்டம் பண்ணினார்.

அது கண்டு ராசாவும் விசாரமிட்டு இவன் எந்த ஊர் ராசாவோ வென்று வெருவி தெண்டம் பண்ணவேணுமென்ற உன்னிதமாக இருக்கிறபோது அண்டையிலிருக்கிற மந்திரிமார் கையைப் பிடித்துக் கொண்டு தெண்டம் பண்ண வொட்டாமல் இந்த ராசகுமாரன் தேவரீருடைய குமாரன் என்று அருக்கை பண்ணினார்கள். அப்போது ராசாவானவர் பிள்ளையைக் கட்டிக் கொண்ட அழுது பிள்ளையை முத்தமிட்டு உச்சியை மோந்துக் கொண்டு சந்தோஷமாக தகப்பனார் வீரசூர துரந்திர மகா ராசாவையும் பல்லக்கிலே வைத்துக் கொண்டு விருது பூரிகையும் ஊதச்சொல்லி தகப்பனும் பிள்ளையும் மைற்று முண்டான மனை மண்டலி கருமகுட மண்ணியரும் பட்டணத்துக்கு வருகிறபோது விருது சினை முழங்குகிற விருத்தம்:-

திருமகள் புனிதன் வந்தான் செகதலத்தில் தனவந்தான்
கருதலா சிங்கன் வந்தான் கருணைசேர் கோவனும் வந்தான்
குருநடைகற் குடையான் வந்தான் கோசலை நாடன் வந்தான்
விருதுமன்னியர்கோன் வந்தான் வீரசூரன் வந்தான் வந்தான்

பரிமள புயத்தான் வந்தான் பாரினில் புயங்கள் வந்தான்
தரியலர் கெருடன் வந்தான் சருற்குணவிருதன் வந்தான்
சொரிகலி புனிதன் வந்தான் துலங்கியத் துடையான் வந்தான்
வெருவியமையறிந்த வீரசூரன் வந்தான் வந்தான்

சந்திர திலதன் வந்தான் சகலசம் பன்னன் வந்தான்
மந்திர சகடத்தாலே மாண்டெதிர் மீண்டான் வந்தான்

சிந்துர தேசத்திலேறி திருமகள் புனைந்தான் வந்தான்
விந்தைசேர் புயத்தான் வந்தான் வீரசூராதிபன் வந்தான்

குளிர்சிலைக்கதிபன் வந்தான் குறுதலர் சிங்கன் வந்தான்
மறுதமிழாளை வென்ற மனதனைப் பயன்றான் வந்தான்
அறிவுகத்தாலே முன்னாள் அமைச்சர் சொல் கேட்டான் வந்தான்
வீரதுரந்தபிமன் வந்தான் வீரசூரன் வந்தான் வந்தான்

மந்திரி சொல்லைக் கேட்டு மதிதிசை மன்னன் வந்தான்
திசைபெரும் தலையின்று செகலப் புரத்தான் வந்தான்
மறுசென்மம் பிறந்தான் வந்தான் அண்டலோகத்திலுள்ளோர்
அதிசெயத் தமிழான் வந்தான் சண்டைப் பிரசண்டன் வந்தான்
தரியலாசமிகன் வந்தான் எண்டிசை புகழ்ந்தான் வந்தான்
யியலரி மன்னன் வந்தான் விண்டலர்க்கதிபன் வந்தான்
வீரசூரன் வந்தான் வந்தான்.

**வசனம் :**

இந்த விதமாக விருது சின்னமு தாடகை மலைவிட்டு விசநகர பட்டணத்திலே வீரமாரனும் அவரிட தகப்பனான வீரசூர மகாராசனும் பட்டணம் பிரவேசித்து வந்து துலங்குறத்தின் சாவடியிலே வந்து வீத்திருந்தார். வந்து இருந்தவுடனே ராசாவின் தேவி பன்னீர் செம்பு கொண்டு பெரியராசுவைப் பாதம் துலக்கி பொற்பூரச் சொறிந்து கையை கட்டி வாய்ப் புதைத்துக் கொண்டு ராசாவைப் பார்த்துச் சொன்ன விருத்தம்:-

சந்திர வதனா போற்றி தாகவாறணனே போற்றி
மந்திரிக் கொடுமையாலே மன்னுயிரிழந்தாய் போற்றி

இந்திரன் பரனே போற்றி இறைவனே போற்றி போற்றி
எந்தன் புருஷர் வீரசூர துரந்தரா போற்றி சோதியோ
போற்றி போற்றி
துலங்க ரோகத்தாய் போற்றி நிதியே போற்றி போற்றி
நெறிதவறாயா போற்றி ஆதியாய் உலகையாண்ட
அரசனே போற்றி போற்றி
வீரமாரனைப் பயன்ற வீரசூர துரந்தரா போற்றி போற்றி
வேந்தர் பொன்னாடுடைய விமலனே போற்றி போற்றி
யேழிசைப் பயிலும் சூழ ராகவா போற்றி போற்றி
ஆழிசூழ் வீரமாறன் அரசர்கோன் தனைப்பயின்ற
ராசனே என்றுமுந் தன்தானவன் தனையுண்டாக்கி
இருந்தபின் அமச்சன் என்னை அன்ணினத்துடநேகூட
அறுத்திடத் துணிந்தபோது தன்னிகர் யிழந்நானும்
சந்திர கிரிபோய் சேந்தேன்.

முற்றும்.

T.7228
T.7228